இலங்கையில் செய்திப் பத்திரியாக பதிவு செய்யப்பட்டது. Registered sa a Newspaper at the GP

# புதிய கண்ணோட்டம்

PUTHIYA KANNOTTAM

පුදිය කණ්ණෝට්ටම්

வெளியீடு: 47 | 20 ஏப்ரல் 1999 | விலை: ரூபா 7.00










★ நான்கு மாகாண சபைகளில் அறுதிப்பெரும்பான்மை இல்லை!

★ இனப்பிரச்சினைக்கான தீர்வை அரசு அமுல்படுத்தாதன்– அதிருப்தியை தமிழ்மக்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

★ இனப்பிரச்சினை தீர்வுக்கு சிங்கள மக்கள் ஆணை!

# திருப்பங்களை ஏற்படுத்தும் தேர்தல் முடிவுகள்

நடந்து முடிந்த மாகாணசபைத் தேர்தலில் பொதுஜன முன்னணி ஐந்து மாகாணசபைத் தேர்தல்களிலும் வென்று மாகாண அரசாங்கங்களை அமைக்க முன் வந்துள்ள போதும் கூட வடமத்திய மாகாணம் தவிர்ந்த ஏனைய நான்கு மாகாணங்களிலும் (ஊவா, சப்ரகமுவ, மத்திய, மேல் மாகாணங்கள்) அறுதிப்பெரும்பான்மை அற்ற நிலையிலேயே உள்ளது. இருப்பினும், அதிகப்படியான ஆசனங்களைக் கொண்ட பொதுஜன முன்னணியையே அரசமைக்கும்படி அவ்வவ் ஆளுநர்கள் கோருவார்கள்.

இதற்கு முன்னர் நடந்த மாகாணசபைத் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தலிலும் விட இம்முறை குறைந்தளவு வாக்குகளைபெற்றுள்ளமையானது ஆளும் கட்சி தொடர்பாக மக்களின் கணிசமான பகுதியினருக்கு அவநம்பிக்கை ஏற்பட்டுள்ளது என்பதையே காட்டுகின்றது.

இது ஒரு புறமிருக்க, சிறுபான்மைக் கட்சிகளின் முக்கியத்துவத்தையும் இத் தேர்தல் வலியுறுத்தி நிற்கின்றது. மத்திய மாகாணத்திலும், மேல் மாகாணத்திலும் இவர்களுடன் கூட்டுக்கு போனாலே ஸ்திரமான அரசொன்றை நடத்த முடியும் என்ற நிலையே இம் மாகாணங்களில் ஏற்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் புதிய இடதுசாரி முன்னணியிலிருந்து ஒருவர் தெரிவாவதற்கும், கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அதிகப்படியான வாக்குகளைப் பெறுவதற்கும், தமிழ் மக்களும் காரணம் என்பதையும் இத்தேர்தல் உணர்த்தி நிற்கின்றது.

இந்நிலையில் ஐ.தே.கட்சி ஆயினும் சரி, இல்லையேல் பொதுஜன முன்னணி ஆயினும் சரி சிறிய கட்சிகளுடனும், சிறுபான்மைக்கட்சிகளுடனும் கூட்டுக் சேர்வதன் மூலமே எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் ஓர் ஸ்திரமான அரசை அமைக்க முடியும்.

அது மாத்திரமல்லாமல் மிகவும் பலவீனமான முறையில் அமையக்கூடிய எதிர்காலப் பாராளுமன்றங்களில் ஓர் காத்திரமான செயற்பாட்டை தமிழ்க்கட்சிகள் செய்ய விரும்பினால், ஓர் ஐக்கியப்பட்ட தமிழ்த் தரப்பொன்றினூடாகவே அதனைச் சாத்தியமாக்க முடியும்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்க்கட்சிகள் பிரிந்து நின்று செயற்பட்டதால் வட–கிழக்கில் தமிழ் மக்களின் ஆறு பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டது. அத்துடன் தமிழ்க்கட்சிகளுக்குள் அரசியல் ரீதியான இணக்கப்பாடுகள் இல்லாமையால், இன்றைய பாராளுமன்றத்திலும் இவர்களால் எதுவும் சாதிக்க முடியவில்லை.





அதே சமயம் பொது ஜன முன்னணி ஐந்து மாகாணசபைகளை கைப்பற்றியதானது சிங்கள மக்கள் அரசின் தீர்வுத்திட்டத்தின் மீதுவைத்துள்ள நம்பிக்கையையும் புலப்படுத்தி நிற்கின்றது. அதே சமயம் நாலரை வருடங்களாக அரசு யுத்தத்தை நிறுத்தி தீர்வுத் திட்டத்தை அமுல்படுத்தவில்லை என்ற அதிருப்தியையும் தமிழ் மக்கள் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

எனவே காலதாமதமின்றி அரசின் தீர்வுத் திட்டம் தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி

தொடர்ச்சி 8ம் பக்கம் ☞

## தமிழ்க்கட்சிகள் இணைந்து நடவடிக்கைகள்

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகியவற்றின் தலைவர்கள், பிரதிநிதிகள் அடங்கிய கூட்டமொன்று 28.03.99 அன்று கொழும்பில் இடம் பெற்றது. தமிழ் மக்களின் எரியும் பிரச்சினைகள் தொடர்பாக இயன்ற வரை தமிழ்க்கட்சிகள் இணைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென பல தரப்பாலும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

T.U.L.F சார்பாக யாழ்ப்பாண உதவி மேஜர் திரு. ரவிராஜ், E.P.D.P சார்பில் அதன் செயலாளர்நாயகமும் யாழ் பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ. டக்ளஸ் தேவானந்தா, T.E.L.O சார்பில் அதன் தலைவரும், வன்னி பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ. அடைக்கலநாதனும், P.L.O.T சார்பில் அதன் தலைவரும், வன்னி பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ. சித்தார்த்தனும், E.P.R.L.F சார்பில் அதன் செயலாளர் நாயகமான திரு. சுரேஷ்பிறேமச்சந்திரனும், இக்கட்சிகளின் ஏனைய பிரதிநிதிகளும் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட கோரிக்கைகளை அரசுக்கு முன்வைப்பதெனவும், அவற்றை நிறைவேற்றுவதற்கான அழுத்தங்களை உருவாக்குவதெனவும் முடிவானது.

1. வலி வடக்கில் பொது மக்களுக்கு சொந்தமான காணிகளை சுவீகரிப்பதற்கு எடுக்கப்பட்டு வந்த நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்ட சூழ் நிலையில் அப்படியான திட்டம் எதுவும் இல்லையென அரசாங்கம் அறிவித்துள்ள போதிலும், வலிவடக்கிலிருந்து இடம் பெயர்ந்த பொதுமக்களை மீண்டும் அவர்களின் சொந்த இருப்பிடங்களில் திரும்பிச் சென்று வாழ்வதற்கு தொடர்ந்து விதிக்கப்பட்டுவரும் தடை நீடிக்கும் வரையில் இத்தகையதோர் சுவீகரிப்புத்திட்டம் இருந்து கொண்டிருப்பதாகவே நாம் கருதமுடியும்.

எனவே வலிகாமம் வடக்கிலிருந்து இடம் பெயர்ந்த தமிழ்மக்களை மீண்டும் அங்கு சென்று வாழ்வதற்கு அரசாங்கம் உடன் அனுமதி வழங்க வேண்டும் எனக் கோருவதுடன், இத்தகைய திட்டம் அமுல்படுத்தப்படுமானால் அரசியல் ரீதியாகவும், சட்ட ரீதியாகவும் அதை எதிர்ப்பதெனவும் முடிவானது.

2. திருகோணமலை மாவட்டத்திலிருந்து ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் அகதிகளாக வெளியேறியுள்ள சூழ்நிலையில்

தொடர்ச்சி 11ம் பக்கம் ☞

கண்ணோட்டம்

## மக்களுக்கான அரசியல் தலைமைத்துவம்

அரசின் யுத்த நடவடிக்கைகள் மூலம் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் இருந்த பல பிரதேசங்கள் படிப்படியாக இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் போய்க் கொண்டிருக்கின்றது. முதல் யாழ்ப்பாணக் குடாநாடு, பின்னர் வன்னியில் நெடுங்கேணி, ஓமந்தை, மாங்குளம், பின்னர் மன்னார் இப்பொழுது மூன்று முறிப்பு, மடு என இராணுவம் தனது கட்டுப்பாட்டு எல்லைகளை விஸ்தரித்து வருகின்றது. இதன் மூலம் புலிகள் பலவீனமாகி வருகின்றார்கள் என்பது மாத்திரமல்லாமல், புலிகளின் படையணிகளுக்கு ஆள்பற்றாக்குறை ஏற்பட்டு வருகின்றது என்பதும் யதார்த்தமான உண்மை.

ஏனைய இயக்கங்களை அழித்து, தாம் தான் ஏகப்பிரதிநிதிகள் என்ற அடிப்படையில், துப்பாக்கி முனையில் அல்லது தமது இராணுவ பலத்தில் தமது பேரம் பேசும் வல்லமையை நிலை நிறுத்தியிருந்தார்கள். அதற்கு ஆபத்து வந்துவிடக்கூடாதென்பதற்காக, தமிழ் மக்கள் மத்தியில் இருக்கக் கூடிய ஜனநாயகத் தலைமைகளையும், ஜனநாயக சக்திகளையும் அழித்து வந்தார்கள். ஒரு வகையில் இது சிறீலங்கா அரசுக்கு சாதகமான சூழலையே உருவாக்கி வந்தது. அதாவது தமிழ் மக்களுக்கு சரியானதோர் தலைமைத்துவம் இல்லாமலிருப்பதென்பது, சிங்கள ஆட்சியாளர் தாம் விரும்பியதை நிறைவேற்ற களம் ஏற்படுத்திக் கொடுத்தது போன்றதே.

இது ஒரு புறமிருக்க வவுனியாவிலும், கிழக்கிலும், மாநகரசபை, நகரசபை, பிரதேச சபை போன்றவற்றின் ஆட்சிக்காலம் ஏப்ரல் மூன்றாம் திகதியுடன் முடிவடைகின்றது. அதன் பின்னர், அங்கு தேர்தல் நடாத்துவது என்பதைத் தவிர்த்து அரசாங்கம், அச்சபைகளை ஆணையாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதன் மூலம் அவற்றை தனது நேரடிக் கண்காணிப்பில் வைத்திருக்கவே விரும்புகின்றது. இதையும் கூட தமிழ் மக்கள் மத்தியில் ஓர் மாற்றுத் தலைமை ஏற்படக்கூடாது என்பதன் வெளிப்பாடாகவே கொள்ளமுடியும்.

இனப்பிரச்சினையை தீர்ப்பதற்க்காக 'இந்திய அரசின் வற்புறுத்தலால் மாகாணசபை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. கடந்த ஒன்பது வருடங்களாக அதற்குத் தேர்தலில்லை. ஆனால் தென்பகுதியில் மாகாண்சபைகளுக்கான தேர்தல்கள் மிகவும் அமர்க்களமாக நடைபெறுகின்றன. அரசு தனது பிரச்சாரத்துக்கு தேவை ஏற்பட்ட போது யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடாத்தியது. இல்லையேல் அதனையும் கூட இவ்வரசு செய்திருக்காது என்பதே கசப்பான உண்மையாகும். மொத்தத்தில் தமிழ்மக்களுக்கு ஓர் மாற்றுத் தலமை, மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஓர் ஜனநாயகத் தலமை ஏற்படக் கூடாதென்பதில் அரசும், புலிகளும் மிகவும் அவதானமாகவே செயற்பட்டு வருகின்றார்கள்.

யுத்தத்தின் மூலம் புலிகளைப் பலவீனமாக்கி, ஏனைய தமிழ் கட்சிகளையும் பலவீனமாக்கி விட்டால், தமிழ் மக்களின் கோரிக்கைகள் வலுவிழந்து பலவீனமாகிப் போகும் என்பதே அரசின்திட்டமாகும். எனவே அரசின் கபடத்தனமான திட்டத்தை முறியடித்து, உள்ளூராட்சித் தேர்தல்கள், மாகாணசபைத் தேர்தல்களை நடாத்தும் படி நாம் வற்புறுத்துவதன் மூலமே நாம் சரியான ஓர் தலைமைத்துவத்தை உருவாக்க முடியும். இவற்றைப் புரிந்து கொள்ளாமல், அரசின் சதி வலைக்குள் அகப்பட்டு, தேர்தல் வேண்டாம் என்று கூறுவோமாயின், நாம் வரலாற்றில் பாரிய தவறிழைக்கின்றோம் என்பதே அர்த்தமாகும்.

இதே நேரம் நோர்வேயிலிருந்து வெளிவரும் சர்வதேச தமிழர் என்ற சஞ்சிகை வெளியிட்டுள்ள வெளிநாட்டுத் தமிழர் மத்தியில் நடாத்திய கருத்துக்கணிப்பை பற்றியும் சில விடயங்களை குறிப்பிட்டாக வேண்டும். புலிகளின் தமிழீழ ஆதரவுப் பிரச்சாரம் சர்வதேச ரீதியில் வெற்றியைத் தந்துள்ளதா என்ற கேள்விக்கு 66 வீதமான தமிழ் மக்கள் இல்லை என்றே குறிப்பிட்டுள்ளனர். 76.9வீதமான தமிழ் மக்கள் தமிழீழம் அமைப்பதொன்றே தீர்வென்று குறிப்பிட்டாலும், 78.9வீதமான தமிழ்மக்கள் மூன்றாம் தரம்பொன்றின் மத்தியஸ்தத்துடன் புலிகள் - ஜனாதிபதியுடன் பேசுவதன் மூலமாக தீர்வொன்றைக்காண முடியுமென்று கூறியுள்ளனர். இன்றைய ஜனாதிபதியின் ஆட்சியின் கீழ் யுத்தம், கைதுகள், என பல வழிகளில் தமிழ் மக்கள் துன்புறுத்தப்பட்டும் கூட 68.2 வீதமான மக்கள் இன்றைய ஜனாதிபதிக்கு பிரச்சினையை தீர்க்கக் கூடிய வல்லமை இன்னும் இருப்பதாக நம்புகின்றனர். இறுதியாக விடுதலைப்புலிகள் தமிழர் ஜனநாயக அமைப்புக்களுடன் புரிந்துணர்வுக்கு வருவது அவசியமா எனக்கேட்டபோது 84.6 வீதமான மக்கள் ஆம் என்றே கூறியுள்ளனர்.

இந்த தரவுகளில் இருந்து நாம் சில முடிவுகளுக்கு வரமுடியும். முதலாவது புலிகள் உட்பட தமிழ் இயக்கங்கள் ஓர் புரிந்துணர்விற்கு வரவேண்டும். இரண்டாவதாக பேச்சுவார்த்தை மூலமே தீர்வொன்று சாத்தியமானது, மூன்றாவது தமிழீழப் பிரச்சாரம் என்பது சர்வதேச சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அதன் மூலம் தமிழ் மக்களின் விருப்பம் தமிழீழமாக இருந்த பொழுதும் கூட இன்றைய பூகோள அரசியலில் அது சாத்தியமில்லை என்பதையே இது புலப்படுத்தி நிற்கின்றது.

இந்நிலையில் ஓர் ஜனநாயகத் தலமையின் அவசியத்தையும், அதனை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் நாம் புரிந்து கொள்ளலாம். இவை ஏற்படுத்தப்பட வேண்டுமாயின் ஜனநாயக நிறுவனங்களின் செயற்பாடுகள் மிக முக்கியமானது என்பதுடன், தமிழ்க்கட்சிகள் இடையில் ஐக்கியமும் அவசியமானது.



# செவிகளில் விழுந்த குரல்கள்



### தப்பியோட விரும்பவில்லை

1995ல் யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றிய பின்னர் அங்கிருந்து இடம் பெயர்ந்தேன். யுத்தத்தின் நடுவே சிக்காமல் இருப்பதற்காக அதன் பின்னர் பல தடவைகளில் இடம் பெயர்ந்துவிட்டோம். தப்பியோடிக் களைத்து விட்டோம். அதன் காரணமாகவே இம்முறை இராணுவம் வந்த போது இடம் பெயரவில்லை. இனித்தப்பி ஓடுவதற்கு விரும்பவில்லை.

- கருணாநிதி என்னும் விவசாயி
மடுவில் பத்திரிகையாளர்களிடம் தெரிவிப்பு.

### அவசியமும், அவசரமும்

தொடரும் போரினால் தமிழ் மக்களின் பழைய பாரம்பரியங்கள் சுவடற்றுப் போகின்றன. இனத்துவப் பண்பாட்டுச் சிறப்பிற்கு அதன் பாரம்பரியங்கள் பாதுகாத்துப் பேணப்படுதல் அவசியமானதும், அவசரமானதுமாகும்.

- செழியன் ஜே. பேரின்பநாயகம்
மட்டு மாநகர முதல்வர்.

### எதுவும் பயனில்லை

மக்களின் தேவைகளுக்கான அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டாலும் யுத்தம் நிறுத்தப்பட்டு இனங்களுக்கிடையில் சமாதானம், ஐக்கியம் ஏற்படாதவரை எதுவும் பயனளிக்க மாட்டாது.

- பசீர் சேகு தாவூத்
மட்டு மாவட்ட இணைப்பாளர் புனர்வாழ்வு அமைச்சு.

### வெட்கக்கேடான செயல்

நாம் இன்று ஒருவரை ஒருவர் கொலை செய்யும் யுத்த வெறியர்களாக மாறியிருப்பது கவலைக்குரியது. விலை மதிக்க முடியாத மனித உயிர்கள் தேவையற்ற யுத்தத்தால் இழக்கப்படுவது பெரிதும் வேதனை அளிக்கிறது. இது மிகவும் வெட்கக்கேடான செயலாகும்.

கலாநிதி ஏ.ரி. ஆரியரத்தினா கருத்து.
- சர்வோதயா தலைவர்.

### இரத்தம் தோய்ந்த கைகளா? மலர்வளையங்களா?

தெற்காசியப் பிராந்தியத்தில் துரதிட்டவசமாக இனங்களுக்கிடையிலும், நாடுகள் மத்தியிலும் கருத்து வேறுபாடுகள், மோதல்கள் இடம் பெறுகின்றன. தெற்காசிய நாட்டவர்கள் இரத்தம் தோய்ந்த கைகளுடனா? அல்லது கைகளில் மலர் வளையங்களுடனா? அடுத்த நூற்றாண்டைச் சந்திக்கப் போகின்றனர்.

- இந்திய திரைப்பட நடிகரும் இயக்குநருமான
சுனில் தத் கொழும்பில் கேள்வி.

### அமைதியின்மைக்கு நிரந்தரத் தீர்வு

சாத்திய மற்ற எதிர்ப்புக்களை தமிழர்களும், கருத்து பேதங்களை சிங்களவர்களும் கொண்டிக்கும் வரை தற்போது இலங்கையில் நிலவும் அமைதியின்மைக்கு ஒரு நிரந்தரத் தீர்வைக் காண முடியாது.

என். ராம் கருத்து
- ஃப்ரொன்ட்லைன் பத்திரிகை ஆசிரியரும், பத்திரிகையாளரும்.

### அரச அதிகாரிகளின் அசமந்தம்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாட்டுக்கான காரணம் அரசாங்க உயர்மட்ட அதிகாரிகளின் அசமந்தப் போக்கே. தனியார் வர்த்தகர்களின் செயற்பாடுகள் அல்ல.

யாழ் வணிகர்கழகப் பிரதிநிதிகள் கூற்று.

### முன்னரில்லாத சோதனை

இன்று தமிழ் சமுதாயத்தில் இருக்கின்ற பிரச்சினைகளை ஒட்டுமொத்தமாகப் பார்க்கின்ற போது எங்களுடைய விழுமியங்கள் சரிந்து போயுள்ளன. இது தான் எங்களுடைய மிகப் பெரிய பிரச்சினையாகும். இதற்குள்ளேயே எல்லாம் அடங்கும். இன முரண்பாடுகள், இடப்பெயர்ச்சி, தளர்ச்சி, ஏழ்மை, அவலம் போன்றவற்றை எமது சமுதாயம் கடந்த பதினெட்டு இருபது வருடங்களாக சந்தித்து வருகின்றது. எமது சமுதாயம் முன்பு ஒரு போதும் இப்படியான சோதனையைச் சந்தித்தது இல்லை.

- பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அதிபர்
சோ. பத்மநாதன் கருத்து

### ஜனநாயகம் அர்த்தமற்றதா?

யாழ்ப்பாணக் குடாநாட்டில் போக்குவரத்து கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பேச்சு சுதந்திரம், அத்தியாவசிய பொருட்கள் பெறுதல், புனரமைப்பு, புனர்வாழ்வு, மீளக்குடியமர்தல், சுயதொழிலில் ஈடுபடுதல் போன்ற விடயங்களில் வரையறைகள் காணப்படுகின்றன. இதனால் ஜனநாயகம் அர்த்த மற்றதாகி விடுகின்றது.

- யாழ் மாவட்ட அரச சார்பற்ற
நிறுவனங்களின் இணையம் அறிக்கை.

### எதிர்பார்த்த நிதியில்லை

யாழ்ப்பாண மாவட்டத்தில் பணி புரியும் சர்வதேச மற்றும் ஐ.நா அமைப்புக்களுக்கு இவ்வருடம் எதிர்பார்த்த நிதி கிடைக்கவில்லை. ஆதலால் கூடியளவு செயற்திட்டங்களை செயற்படுத்த முடியாத நிலை மேலெழும்பியுள்ளது.

- யாழ் அரசாங்க அதிபர் விபரிப்பு.

### சிறையில் இருக்கிறேன்?

ஐ.தே.கவின் கொலையாளிகளுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் பயந்து சிறையில் அடைக்கப்பட்டதைப் போன்ற நிலமையில்தான் நான் இருக்கின்றேன்.

தேர்தல் பிரசார கூட்டத்தில்
ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு.

### மீளக்குடியேறல் அவசியம்

மீளக்குடியமர்தப்படாத அகதிக் குடும்பங்கள் மத்தியில் ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. முகாம் வாழ்க்கை அவர்களுக்கு பழக்கப்பட்டு விட்டதால் அவர்கள் சொந்த இடங்களில் மீளக்குடியமர்வதை விரும்பவில்லை என்பது தெரியவந்தது. முகாமில் சகல வசதிகளும் கிடைப்பதே இதற்குக் காரணமாகும். விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்கு மீண்டும் சென்று குடியமராது தொடர்ந்து முகாம் வாழ்க்கையை மேற்கொள்வது எதிர்காலத்தில் பல சமூகப் பிரச்சனைகளை தோற்றுவிக்கும். விடுவிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்கள் மீளக்குடியமரச் செய்வதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவவேண்டும்.

எஸ்.டி. சந்திரதாஸா.
- திருகோணமலை அரசாங்க அதிபர்.

### புலிகளுக்கு பாராட்டு

இராணுவ கட்டுபாடற்ற பகுதிகளில் இடம் பெறும் எந்தவோர் அபிவிருத்திப் பணிகளிலும் விடுதலைப்புலிகள் தலையிடுவதில்லை. சமூகநல நடவடிக்கைகளுக்கு அவர்கள் ஆட்சேபம் தெரிவிப்பதில்லை.

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற
உறுப்பினர் அலி சாகிர் மௌலானா.

### ஜனநாயமும் குற்றுயிராக...

இந்த நாட்டில் நீண்ட காலமாய் நிலவும் இனப்பிரச்சினைக்கான தீர்வு ஜனநாயக சூழலில் தான் தீர்த்து வைக்கப்பட வேண்டுமென அவசியமாக உணரப்பட்டுள்ள சூழலில் துரதிஸ்டவசமாக ஜனநாயகமே இன்று நோய் வாய்ப்பட்ட கட்டிலில் குற்றுயிராக படுக்க வைக்கப்பட்டிருக்கிறது.

தேர்தல் பிரச்சாரக்கூட்டத்தில்
அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப்.

### பொருளாதாரம் சிதைகிறது

குடாநாட்டின் முக்கிய தொழில்களான விவசாயம், மீன்பிடி, இரண்டும் இன்று முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. நிவாரணத்தில் தங்கியிருக்கும் நிலைக்கு எமது மக்கள் உட்படுத்தப்பட்டுள்ளனர். போராட்டம் எங்கள் பொருளாதாரத்தைச் சிதைத்து விட்டது.

- சகோதரப் பகிர்வு வாழ்வு சங்க ஆரம்ப வைபவத்தில்
யாழ்ப்பாண ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம்
ஆண்டகை.


## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

உங்களிடமிருந்து அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் புதிய கண்ணோட்டம் வரவேற்கிறது.

அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:

**புதிய கண்ணோட்டம்**
**த.பெ.இல: 442**
**கொழும்பு**

E.P.I.C., Box No: 95,
95144, GargesLes,
Gonnesse Cedex,
France.

B.M.Box: 1738,
London-WCIX-3NN,
U.K.

Post Bag: 1041,
Madras-17,
India.

P.Fach: 506,
Bern-17,
Switzerland.

54, மாணிக்கவாசகர் வீதி,
திருகோணமலை.
☎ 026-22858

310, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 021-2022

P.Fach: 66,
59514 Welver,
Germany.

பள்ளிமுனை வீதி,
உப்புக்குளம்.
மன்னார்.
☎ 023-2370

29A, வாவிக்கரை வீதி-1,
மட்டக்களப்பு.
☎ 065-22398

22, வெளிவட்ட வீதி,
வவுனியா.
☎ 024-22724

**மின் அஞ்சல் முகவரிகள் (E-mail Address):**

epic-sl@slt.lk - Colombo
csorg@slt.lk - Jaffna
epic-vu@sltnet.lk - Vavuniya
epiclondon@gn.apc.org - London
editor@epicnews.com - Canada
epic-g@t-online.de - Germany

**Web site Address : http://www.epicnews.com**

## அன்பிற்கினிய தமிழ் பேசும் மக்களே!

நீண்ட காலத்தின் பின்னர் தமிழ்க்கட்சிகள் கூடிப் பேச ஆரம்பித்துள்ளன. தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமைதான், சிங்கள அரசாங்கத்துக்கு நிற்பந்தத்தைக் கொடுக்கும் என்பதை, நீங்கள் சொல்வது மாதிரியே தமிழ்க்கட்சிகளும் உணர்கின்றன.

ஆனாலும் அவர்கள் மத்தியில் உள்ள சிறிய முரண்பாடுகள் அவ் ஒற்றுமை ஏற்படுவதற்கு குந்தகமாக இருந்து வந்தது. அம் முரண்பாடுகள் இன்னும் இருந்த பொழுதும் கூட, அம் முரண்பாடுகளைத் தவிர்த்து உடன்பாடான கருத்துக்களிலாவது ஒத்துப்போக வேண்டும் என்பது காலத்தின் கட்டாயமாகும். இதனை தமிழ்க்கட்சிகள் புரிந்து கொள்ளும் என நான் நம்புகின்றேன்.

அதே சமயம் ஒற்றுமைக்கு குந்தகமாக இருக்கக்கூடிய விடயங்கள், இயன்றவரை விரைவில் களையப்படவேண்டும் என்பதையும் இங்கு சுட்டிக் காட்டுவது பொருந்தும். முதலாவதாக கட்சிகள் மத்தியில் ஏற்படும் சகல கருத்து முரண்பாடுகளும் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்பட வேண்டும்.

இரண்டாவதாக, மக்களின் உரிமைகளுக்காகப் போராடப்புறப்பட்ட நாம், மக்களை பாதிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவதை தவிர்த்துக் கொள்வதானது, மக்கள் மத்தியில் நம்பிக்கையையும், இயக்கங்கள் மத்தியில் புரிந்துணர்வையும் ஏற்படுத்தும்.

மூன்றாவதாக தமிழ் மக்களின் கோரிக்கைகள் தொடர்பாக, ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் ஓர் சமஷ்டி ஆட்சி ஏற்பட வேண்டுமென்பதில், தமிழ்க்கட்சிகள் தெளிவாக உள்ளன.

ஆனால் அவற்றின் அதிகாரங்கள், அலகு போன்ற விடயங்களில், சில வேற்றுமைகள் இருக்கின்றன என்பது உண்மையே. இவ்வாறான விடயங்கள் முழுமையான விவாதத்திற்குள்ளாக்கப்பட்டு, அவற்றில் கருத்தொற்றுமைகாண வேண்டுமென்பது மிகவும் அவசியமானதாகும்.

இவ்விடயங்களில் எம்மால் கருத்தொற்றுமைக்கு வரமுடியாவிடில், தமிழ் மக்களின் கோரிக்கைகளை நாம் ஒரே குரலில் பேச முடியாதென்பதுடன், இனப்பிரச்சினை தீர்வுக்கு ஆளும்கட்சி-எதிர்க்கட்சிகளுக்கிடையில் ஒற்றுமை உருவாக வேண்டுமென நாம் கூறுவதிலும் அர்த்தமில்லாமல் போய் விடும்.

எனவே தமிழ் கட்சிகள் மத்தியில் அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பாக கருத்தொற்றுமை உருவாக வேண்டும், அது மிக மிக அவசியமானது என்பதையும் தமிழ்க்கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

நடைபெறுகின்ற யுத்தத்திற்கு முடிவு கட்ட, தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய நியாயபூர்வமான தீர்வொன்றை எட்ட, தமிழ்க்கட்சிகள் மத்தியிலான ஒற்றுமை மிகவும் அவசியமானதாகும்.

ஜனநாயகம் இல்லை, கொள்ளை அடிக்கின்றார்கள், கொலை செய்கின்றார்கள், கப்பம் வாங்குகின்றார்கள், அரசுக்கு ஆதரவாக செயற்படுகின்றார்கள் என்ற பல்வேறு விதமான விமர்சனங்கள் தமிழ்க்கட்சிகள் மீதுண்டு.

அதேபோல் ஓர் இயக்கத்தைப் பற்றி இன்னொரு இயக்கமும் பல விமர்சனங்களைக் கொண்டிருக்கும்.

ஆனால் இப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நாம் வழிவகைகளை கண்டு பிடிக்க வேண்டுமே அல்லாமல், இப்பிரச்சினைகளைக் காரணம் காட்டி நாம் ஒற்றுமைப்படுவதிலிருந்து பின்வாங்கி விடக்கூடாது.

கடந்த மார்ச் மாதம் 28ம் திகதி தமிழ்க்கட்சிகள் சந்தித்துப் பேசியமையானது, மிகவும் பாராட்டப்படவேண்டிய விடயமாகும்.

ஆனால் இச் சந்திப்புகள் நின்று போகாமல் தொடர வேண்டும் என்பதுடன் இந் சந்திப்புக்கள் ஓர் ஐக்கிய முன்னணியை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு முன்னெடுக்கப்படவேண்டும்.


மக்கள் யுத்தத்தால் மிகவும் களைத்துவிட்டார்கள். தமது இரத்த பந்தங்களை இழந்து, உற்றார் உறவினரை இழந்து வருடக்கணக்கில் அகதி வாழ்க்கைக்குள் அல்லல்பட்டு, அநாதைகளாகவும், பஞ்சை பராரிகளாகவும், போக்கிடமின்றி நாடோடிக்கூட்டமாக எமது மக்கள் மாற்றப்பட்டுள்ளனர்.

தனி நாட்டுக்காகப் போராட புறப்பட்டு, இன்று வலி-வடக்கிற்கே சிங்களக் குடியேற்றம் வந்துவிடுமோ என்று அஞ்ச வேண்டிய சூழ்நிலையிலேயே நாம் வாழ்ந்து வருகின்றோம், ஆயுதப் போராட்டம் தொடர்வதென்பது மேலும் மேலும் எமது மக்கள் அழிந்தொழித்து போகவே வழிசமைக்கும்.

இந்நிலையில் திட்டவட்டமான முடிவுகளை எடுத்து எமது மக்களை வழிநடாத்த வேண்டியதும், இவ்வல்லல்களிலிந்து தமிழ் மக்களை மீட்டெடுத்து, அவர்களைப் பாதுகாக்க வேண்டியதும் தமிழ்க்கட்சிகளின் கடமையாகும். இதனை தனியொரு கட்சியாக சாதிக்க முடியாது என்பதை தமிழ்க் கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வடிப்படையில்தான், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஒற்றுமை, ஐக்கியம் ஆகியவற்றின் அவசியத்தை வலியுறுத்துகின்றது.

எமது மக்களின் நலன்களை முதன்மைப் படுத்தி, கட்சி நலன்களை இரண்டாம் பட்சமாக கருதுவோமாயின், நிச்சயமாக எம்மால் பல விடயங்களைச் சாதிக்க முடியும். இதனையும் தமிழ் கட்சிகள் கருத்தில் கொள்ள வேண்டும்.

தமிழ்க்கட்சிகளை சீர்குலைப்பதிலும், அதற்குள் பிரச்சினைகளை தோற்றுவிப்பதிலும், கட்சிகளுக்கிடையில் மோதல்களை உருவாக்குவதிலும் அவற்றை மக்கள் மத்தியில் செல்லாக்காசான கட்சிகளாகக் காட்டுவதிலும் அரசும் அதன் பாதுகாப்பு நிறுவனங்களும், மிகத்தந்திரமாகச் செயற்பட்டுவருகின்றன.



எமக்குள் ஏற்படும் ஒற்றுமை என்பது சிங்கள அரசுக்கு வயிற்றில் புளிகரைத்த நிலையையே ஏற்படுத்தும்.

நாம் ஐக்கியப்பட்டு, பலமாய் இருப்பதை எமது எதிரி எப்பொழுதும் விரும்பப் போவதில்லை. நாம் ஐக்கியப்பட்டு பலமாய் இருப்பது, சிங்கள அரசுக்கு எப்பொழுதும் தலையிடியாகவே இருக்கும்.

எனவே எம்முள் பல்வேறுபட்ட குழப்பங்களை உருவாக்குவதிலும், எம் மத்தியில் முரண்பாடுகளை உருவாக்குவதிலும் அரசு தீவிரமாகச் செயற்படும் என்பதையும் புரிந்து கொண்டு எமது நகர்வுகள் அமைய வேண்டும்.

ஜனநாயக நீரோட்டத்தில் கலந்துள்ளதாக எம்மைப்பற்றி பேசும் நாம், எம்மை முழுமையான ஜனநாயக சக்திகளாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

எமது கைகளில் ஆயுதங்கள் இருக்கும் வரை எம்மைத்தமது பகடைக்காய்களாக மாற்றவே அரசும், ஆயுதப்படையும் முயற்சிக்கும். இவற்றிலும் நாம் கவனமாக இருந்தாலே, எமக்குள் முழுமையான ஐக்கியம் உருவாகும் என்பதுடன், எமது மக்களின் உரிமைகளை வென்றெடுக்கவும் வழி பிறக்கும்.

**அன்பார்ந்த மக்களே!**


உங்களுக்கு சில கடமைப்பாடும் உண்டு. தமிழ்க்கட்சிகள் ஐக்கியப்பட வேண்டுமென வலியுறுத்தும் நீங்கள், அவர்கள் ஐக்கியப்பட்டு வரும் பொழுது அவர்களுக்கு, உற்சாகமும், ஒத்துழைப்பும் கொடுக்க வேண்டும்.

ஒற்றுமைக்குள் வராமல் வெளியில் இருக்கும் அமைப்புகளையும் இதற்குள் வர வலியுறுத்த வேண்டும்.

தமிழ்க்கட்சிகள் மத்தியில் ஒற்றுமை இல்லாத போது அவற்றை கேலியும், கிண்டலும் செய்யும் தமிழ் பத்திரிகைகள், அவர்கள் ஒற்றுமைப்படும் பொழுது உற்சாகப்படுத்துவதில்லை என்பது கசப்பான உண்மையே.

இவற்றிலும் மாற்றங்கள் உருவாக்கப்பட வேண்டும். எனவே தமிழ்க்கட்சிகளும், தமிழ்மக்களும் யதார்த்த நிலைகளைப் புரிந்த கொண்டு, செயற்படுவோமாயின், எமது பிரச்சினைகள் தீரவழிபிறக்கும் என உறுதியாக நம்புகின்றேன். மறு மடலில் சந்திக்கும் வரை.

அன்புடன்
சுரேஷ்



# அமைச்சரும், முஸ்லிம் காங்கிரசின் தலைவருமான எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களுக்கு ஒரு திறந்த மடல்!

**மாண்புமிகு எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களுக்கு,**

வணக்கங்கள். சாந்தி இல்லம் அமைத்து சமாதானப்பயணம் ஆரம்பித்துள்ளமை குறித்து மனங்கனிந்த பாராட்டுக்கள். இனங்களுக்கு இடையிலும், மதங்களுக்கிடையிலும், ஒற்றுமையுடன், புரிந்துணர்வும் வளரவேண்டுமென அண்மைக்காலமாக ஆற்றிவரும் உரைகள் கண்டு மிக்க மகிழ்ச்சி.

மொழி மனித உள்ளங்களுக்கிடையிலான உறவுக்கு பாலமாக அமைய வேண்டுமேயன்றி பிளவுகளுக்கான வித்துக்களாகிவிடக்கூடாது என்ற உங்களின் நியாயமான சிந்தனைக்கு வாழ்த்துக்கள். மொழி பெயர்ப்பு என்பதே தேவைப்படாதளவுக்கு ஒவ்வொருவரும் ஏனைய மொழி பற்றிப் புரிந்து கொள்ளக்கூடியவர்களாக மலர வேண்டும் என்ற உங்களின் ஆவல் கண்டு ஆனந்தம்.

எதிர்க்கட்சியே இல்லாத ஜனநாயகம் பற்றி உங்களின் கனவு பற்றி எண்ணி மானுடம் என்னும் வெள்ளத்தில் ஒவ்வொரு தனி மனிதனும் ஒரு துளி என்னும் நிலைக்கு இட்டுச் செல்லப்படலாமா என்பது குறித்து சிந்தனைகள் மேலோங்கின்றன. தேசிய ஐக்கிய முன்னணியை ஸ்தாபித்து நட்புறவுக்கு பாலம் அமைக்கும் உங்கள் முயற்சிக்கு வாழ்த்துக்கள்.

இருந்த போதிலும், உங்கள் செயற்பாடுகளில் சில குறித்த ஐயங்களும், சந்தேகங்களும் எழுவதால் தான் இம் மடலை வரைய வேண்டியதாயிற்று. முதலாவதாக முஸ்லிம் காங்கிரசின் தோற்றமானது தமிழ் மொழியைப் பேசும் மக்கள் மத்தியில் ஒரு வித பிளவை உண்டுபண்ணும் சதியின் அங்கமாகவே பலராலும் கருதப்பட்டது.

குறிப்பாக கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம்களின் நலன்கள் குறித்தும், தனித்துவம் குறித்தும் நீங்கள் கவலைப்பட்டளவுக்கு தென்னிலங்கை முஸ்லிம்களின் அரசியல் எதிர்காலம் பற்றிக் கவலைப்பட்டிருக்கவில்லை. வடக்கு கிழக்கு மாகாணசபைக்காக 1988ன் இறுதிப் பகுதியில் நடந்த தேர்தல் தான் முஸ்லிம் காங்கிரசுக்கு முதன் முதலில் ஒரு அரசியல் பலத்தை வழங்கியது எனலாம். இதன் மூலம் முஸ்லிம் காங்கிரசின் வித்துக்கள் முளைத்து வளர வழி ஏற்பட்டது.

வடக்கு கிழக்கு மாகாணசபையின் ஒருவருடகால ஆட்சியில் முஸ்லிம் மக்களின் அரசியல் நலன்களுக்கு குந்தகமான செயற்பாடுகள் இடம்பெறவில்லை என்பதை ஒப்புக்கொள்வீர்களென நம்புகின்றேன்.

இணைந்த வடக்கு, கிழக்கு மாகாணத்தில் தமிழ்மொழி பேசும் மக்களனைவரும் தத்தம் அபிலாசைகளைப் பூர்த்தி செய்து கொள்ள வாய்ப்புக்கள் உண்டென்பதை நிராகரிக்க மாட்டீர்கள் என்பது நிச்சயம்.

எனினும் எல்லா மட்டங்களிலும் ஐக்கியம் மலரவேண்டும் என்று ஆசைப்படும் நீங்கள் வடக்கு கிழக்கு இணைப்புக்கு மட்டும் நிபந்தனை விதிப்பது ஏன்? வடக்கும் கிழக்கும் தொடர்ந்தும் இணைந்திருப்பதற்கு தென்கிழக்கு மாகாணசபை தேவை எனக்கோருவதன் மூலம் குந்தகம் ஏற்படுத்துவது எதற்காக?

முஸ்லிம் மக்களின் மீது புலிகளாலும், ஆயுதபாணிகளாலும் திணிக்கப்பட்ட குரூர அனுபவங்கள் உண்டு என்பது மறுக்கப்பட முடியாதது. கசப்பான வேதனையான - அந்தத் துயரங்களின் வடுக்கள் இலகுவாக ஆறிவிடக்கூடியவையல்ல என்பதும் ஒப்புக் கொள்ளப்பட வேண்டியதே. இருந்தாலும் எல்லாத்தரப்பிலுமுள்ள தீவிரவாதப் போக்குகளை முறியடிப்பதற்கு நிதானமாக சிந்திப்பவர்கள் வழிகாட்ட முன்வர வேண்டியதே காலத்தின் தேவையாக விரிகிறது. எனவேதான் இருட்டில் தடுமாறும் குருடனைப் போலத் தொடரும் பிரிவினைவாதப் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கும் கூட நிதானமாக சிந்திக்கும் அரசியல் தலைவர்கள் மத்தியில் கருத்தொருமிப்பு தேவைப்படுகிறது.

இதனை எய்தும் வகையிலேனும் நீங்கள் தமிழ் மக்கள் மத்தியிலுள்ள ஜனநாயக சக்திகளை பலப்படுத்த முன்வரவேண்டும். அரசாங்கத்தின் முப்படைகளையும் எதிர்த்து நிற்கும் புலிகளின் தலைமையுடன் சவால் விடுத்து செயற்படுவது தமிழ்க்கட்சிகளுக்கு எவ்வளவு சிரமமானது என்பதைப் புரிந்து கொள்வீர்களென நம்புகின்றேன். இலங்கைத்தீவின் ஒருமைப்பாடு பேணப்பட வேண்டுமென்பதற்காக உயிர்த்தியாகம் செய்து, மரண அச்சுறுத்தலை எதிர் நோக்கியும் செயற்படும் சூழ்நிலையைப் புரிந்து கொள்வது உங்களுக்கு சிரமமானதாக இருக்காது.

ஆககேவதான் நிபந்தனையற்ற வகையில் வடக்கு, கிழக்கு இணைப்பை உத்தரவாதப்படுத்துவது மூலம் தீவிரவாதப் பிரிவினைப் போக்குகளை முறியடிக்கவும், தமிழ்மொழி பேசும் மக்கள் மத்தியில் சுமுகமான நல்லுறவுக்கு வழிவகுக்கவும் தாங்களும், தாங்கள் தோற்றுவித்த கட்சியும் முன்வரவேண்டுமென எதிர்பார்க்கின்றோம்.

ஆவரங்கால் சிவலிங்கம்

# தென்பகுதி மாகாணசபைத் தேர்தல்களும் அதிகாரப்பரவலாக்கமும்

**இந்த மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிடும் கட்சிகளுக்கு மாகாணசபைகளில் ஒரு பலப்பரிட்சையில் வெல்வது என்பதைத் தவிர அதன் அதிகாரங்கள் பற்றி எந்த அக்கறையும் கிடையாது. பதின்மூன்றாவது திருத்தச்சட்ட மூலத்தின் கீழ் உள்ள அதிகாரங்கள் முறையாக பரவலாக்கப்பட்டதா என்பது பற்றி எப்போதும் அலட்டிக்கொண்டது கிடையாது. சுகாதார சேவை,கல்வி, போக்குவரத்து போன்ற துறைகளிலான அதிகாரங்களை மத்திய அரசு பிரயோகிக்கும் போது கூட இந்த மாகாணசபைகளில் பதவிக்கு வருபவர்கள் இவை பற்றிக் கேள்வி எழுப்புவதில்லை.**

காரணம் மத்திய அர்சுக்கு பங்குதாரர்களாக போட்டியிடும் கட்சிகளே இங்கும் போட்டியிடுகின்றன. எனவே இங்கு அதிகாரப்பரவலாக்கல் என்ற எண்ணப்பாட்டை விட மத்தியில் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான ஊன்றுகோலாகவே ஸ்ரீ.ல.சு.க., ஐ.தே.க போன்ற கட்சிகள் இந்த தேர்தல்களை கருதுகின்றன.

தெற்கில் அதிகாரப்பரவலாக்கல் பற்றிய கோரிக்கைகள் இந்த நாட்டின் தமிழ், முஸ்லீம், மலையக மக்களின் கோரிக்கைகளுக்கு வலுச்சேர்த்து விடும் என்று இக்கட்சிகளைச் சேர்ந்தவர்களில் ஒரு கணிசமான பகுதியினர் கருதுகின்றனர். இவர்களின் மனங்களில் மையவாதம்தான் மேல்லோங்கி இருக்கிறதே தவிர அதிகாரப்பரவலாக்கம் அல்ல.

வயம்ப தேர்தல் பிரச்சாரக் கூட்டம் ஒன்றில் ஜனாதிபதி அவர்கள் உரையாற்றுகையில் பொதுஜன முன்னணி பதவிக்கு வருமிடத்து இந்த மாகாணத்தில் உள்ள சில பாடசாலைகள் தேசியப் பாடசாலைகளாக தரம் உயர்த்தப்படும் என்று குறிப்பிட்டார். இது அதிகாரப்பரவலாக்கலுக்குட்பட்ட விடயங்கள் பெறுமதி அற்றவை என்ற கருத்து நிலையையும் உள்ளடக்குகிறது. அதிகாரப்பரவலாக்கலுக்கு மாறான ஒருமையவாத சிந்தனைப்போக்குமாகும்.

தேசியம் என்பது கூட மத்தி, மாகாணம் எல்லாவற்றையும் உள்ளடக்கியது. இங்கு தேசியம் என்பது மத்தி என்ற அர்த்தத்தையே பெறுகிறது.

அதை விட தென்பகுதி அரசியல்வாதிகளுக்கு அதிகாரப் பரவலாக்கலில் ஆர்வம்மின்மை தென்பகுதிக்கு அது அவசியமில்லை என்ற மனோபாவத்திலிருந்து வருகிறது.

தவிர எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் சமத்துவமற்ற அதிகாரப்பரவாக்கல் பற்றி குறிப்பிடுகிறார். இது இரு வேறு அர்த்தங்களைப் பெறும்.

1. இனப்பிரச்சினைக்குள்ளான மக்களுக்கே அதிகாரப்பரவலாக்கல் என்பது. அல்லது

2. வடகிழக்குக்கான அதிகாரப்பரவலாக்கல் கூடுதலாகவும், ஏனைய பகுதிகளுக்கு குறைவாகவும் என்றும் அர்த்தப்படலாம்.

இந்த விடயம் இதயசுத்தியுடன் சொல்லப்பட்டதா அல்லது இப்போது அரசு முன்வைத்திருக்கும் தீர்வு யோசனைக்கு மறுத்தான் போடச் சொல்லப்பட்ட எதிர்க்கட்சியின் மாமூலான வார்த்தை விளையாட்டா என்தெல்லாம் கேள்விக்குரியன.

மாகாணசபை முறைமை அமுலுக்கு வந்து 10வருடங்களுக்குப் பின் இவை சாதித்தவை என்ன என்பது பற்றி ஒரு முறையான ஆய்வு நடத்தப்பட வேண்டும்.

இவை நாட்டுக்கு ஒரு சுமையாக இருக்கின்றனவா? என்பதனை ஆராயவேண்டும்.

உண்மையில் அதிகாரப் பரவலாக்கல் என்ற கருத்துரு இனப் பிரச்சினைக்கு தீர்வு என்ற அடிப்படையிலேயே உருவாகியது. ஆனால் தமிழர்களுக்கு ஏதோ வழங்கிவிட்டதாக சிங்கள் மக்கள் சந்தேகப்பட்டு விடக்கூடாது என்பதற்காகவே ஏன்னய மாகாணங்களுக்கும் அதிகாரப்பரவலாக்கல் அமுலுக்கு கொண்டு வரப்பட்டது. அதனால் தான் அதற்கப்பால் அதற்கு முக்கியத்துவம் அற்று போனவது.

தற்போது நாட்டின் அதிகாரத்தை கைபற்றுவதற்கு மக்களிடம் எமக்கு எவ்வளவு செல்வாக்கு இருக்கிறது என்பதை அளப்பதற்கான கருவியாகவே இவை மாறியுள்ளன.

**எந்த மக்களுக்கு இந்த மாகாணசபை முறை தீர்வாகக் கொண்டு வரப்பட்டதோ அங்கு அது பிரேமதாசாவின் புண்ணியத்தில் கலைக்கப்பட்டதோடு சரி. அது பற்றி யாரும் கவலை கொள்வதில்லை. ஆனால் அதிகாரப்பரவலாக்கல் இனங்களுக்கு மாத்திர மல்ல பல்வேறு பிராந்தியங்களில் வாழும் மக்களுக்கும் சிறந்தது.**

**இலங்கையின் தொலைதூர கிராமங்களில் வாழும் மக்கள் தமது மாகாணத் தலைநகருக்க செல்லாது கொழும்பு சென்றே தமது பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய நிலை. எமது அரசியல் வாதிகளும் தமிழ் அரசியல் வாதிகள் உட்பட கொழும்பு மையவாத எண்ணங்கொண்டவர்களாகவே இருக்கிறார்கள்.**

இந்தப் போக்கு அடியோடு மாற்றப்படவேண்டும். அப்போதுதான் கிராமப் புறத்திற்கும் நகரப்புறத்திற்கும் இடையேயான ஏற்றத்தாழ்வு, உள்ளக கட்டமைப்புகளில் மற்றும் சமூக பொருளாதார துறைகளிலும் பாரிய மாற்றங்கள் ஏற்படும்.

தவிர மத்திய பாராளுமன்றத்தில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற தோற்றப்பாடுகள் நிலவுவது போல நாடளாவிய அளவில் வெவ்வேறுகட்சிகளின் ஆட்சியில் மாகாணசபைகள் ஆளும் எதிர் கட்சிகள், என்ற நிலை ஆரோக்கியமான ஒரு ஜனநாயக சூழலைத் தோற்றுவிக்கும். நாட்டை ஜனநாயமயப்படுத்துவதற்கு இதுவும் ஒரு சிறந்த வழியாகும்.

அதிகாரப் பரவலாக்கல் பற்றிய எண்ணங்கள் மக்கள் மத்தியில் வளர்ந்துள்ள அளவிற்கு அரசியல் கட்சிகள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

குறிப்பாக பொதுஜன முன்னணி. அதிகாரப்பரவலாக்கல் பற்றி பல்வேறு ஸ்தாபனங்களூடாக நடத்திய கருந்தரங்குகள் ஓரளவுக்கு நல்ல பலனைத் தந்திருக்கிறது என்றே கூறவேண்டும்.

ஆனால் அதனை உண்மையான அதிகாரப்பரவலாக்கல் மூலம் பூரணத்துவப்படுத்தாமல் இடைநடுவில் கைவிடுவது என்பது அத்தனைபேருடைய உழைப்பையும் வியர்த்தமாக்கிவிடுவதோடு பரந்த நோக்குடன் செயற்பட்ட பல முற்போக்காளர்களை விரக்தியின் விளிம்புக்குத் தள்ளிவிடும்.

இந்த பல்வேறு அம்சங்களையும் கருத்திற்கெடுத்து சம்பந்தப்பட்டவர்கள் செயற்படுவார்களா? பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.


ரி. சிறீதரன்

---

# இந்தியத் திரைப்பட விழா 99

ஜனவரி 29ம் திகதியிலிருந்து பெப்ரவரி 4ந் திகதி வரை கொழும்பு லிபர்ட்டி திரை அரங்கில் திரைப்படவிழா நடைபெற்றது.

இந்தியா சுதந்திரம் பெற்ற காலத்து இந்து முஸ்லீம் கலவரங்கள் அதனால் நேர்ந்த மானிடத்துயரங்கள் உள்ளிட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகள் 8 திரைப்படங்கள் காண்பிக்கப்பட்டன.



22 யூன் 1987, மகாத்மாவின் உருவாக்கம் (TEH MAKING OF THE MAHATMA) சர்தார் (SARDAR) நேரு, காந்தி, இருள் (TAMAS 1-11) பாகிஸ்தானுக்கு ரயில் (TRAIN TO PAHISTAN) உஸ்ணக்காற்று (GARM HAVA) ஆகியனவே திரையிடப்பட்ட படங்கள். ஆசியத் திரைப்படமையமும் இந்தியத் தூதரகமும் இணைந்து இந்த திரைப்பட விழாவை நடத்தின.

மகாத்மாவின் உருவாக்கம், சர்தார் ஆகிய படங்கள் இவற்றில் முக்கியமானவை.

இந்த இரண்டு படங்களும் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பங்களித்த இரு முக்கியமான தலைவர்களைப் பற்றிச் சித்தரிக்கின்றன. முதலாவது படம் மோகன் கரண்சம் காந்தி தென்னாபிரிக்காவில் மகாத்மாவாக உருவாகியதைப் பற்றிச் பேசுகிறது.

சர்தார் 1945-50 வரையிலான காலத்தில் இந்திய நாட்டின் உருவாக்கத்தில் பட்டேல் அவர்கள் வழங்கிய பங்களிப்பை சிறந்த முறையில் சித்தரித்தது. நிசாம்கள், சமஸ்தானங்கள், ராஜாக்களின் கீழ் சிதறுண்டிருந்த இந்தியாவை உருவாக்குவதில் பட்டேல் அவர்கள் உறுதியான பங்களிப்பை வழங்கினார்.

முஸ்லீம் லீக்கின் தலைவர் ஜின்னா இந்தியா சுதந்திரத்திற்குத் தயாராகிக் கொண்டிருந்த வேளையில் பாகிஸ்தான் பிரிவினையைக் கோரினார். முழுதாக இல்லாவிட்டாலும் இந்தியாவின் சுதந்திரத்தை பெரும்பகுதிக்காகதக் கவைப்பது அவசியம் என பட்டேல் கருதினார்.

மகாத்மாகாந்தி இந்தப் பிரிவினையை உண்மையிலேயே விரும்பவில்லை. ஆனால் அதில் பட்டேல் உறுதியாக நின்றார்.

இந்தியாவின் பல்வேறு கிராமங்களிடம் அவருக்கிருந்த தொடர்பு, இனங்கலவரங்களின் போது தலைவர்கள் தமது ஆளுமையை வெளிப்படுத்திய விதம் இப்படத்தில் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டது.

தன்னலமின்மை, எளிமை, சுறுசுறுப்பு, அசாதாரண ஆளுமை, உறுதியாக முடிவெடுக்கும் தன்மை ஆகியவையே இவர்களைத் தலைவர்களாக உருவாக்கியது இவ்விருபடங்களும் முறையே சியாம் பெனகல் அவர்களாலும், கேதன் மேத்தா அவர்களாலும் இயக்கப்பட்டன. மாபெரும் வரலாற்று நிகழ்வுகள் இங்கு சிறந்த முறையில் திரைப்படமாக்கப்பட்டுள்ளன. நிறையவே வரலாற்றுத் தகவல்களைச் சேகரித்து கடின உழைப்பைமேற்கொண்டு இப்படங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

தலைமைத்துவ வெற்றிடமும், சுயநல, சர்வாதிகாரத் தலைமையும் நிறைந்த எமது பிரதேசங்களில் இப்படங்கள் பட்டி தொட்டி எங்கும் திரையிடப்பட வேண்டும். அப்போதுதான் தலைவர்கள் யார்? அவர்கள் எவ்வாறு உருவாகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

பாகிஸ்தானுக்கு ரயில் படம் பஞ்சாப் பகுதியில் சீக்கியர்களும், முஸ்லீம்களும் ஐக்கியமாக அமைதியாக வாழும் ஒரு கிராமம். இந்தியாவின் வேறு வேறு பகுதிகளில் நடைபெற்ற மதக்கலவரங்களில் கொல்லப்பட்ட சீக்கியவர்களின் உடல்கள் அந்தக்கிராமத்திற்கு ரயிலில் வருகின்றன. இதனைக் கிராமவாசிகள் பார்க்கிறார்கள். இவர்களிடையே விசம் விதைக்கப்படுகிறது. ஒன்றாக வாழ்ந்த சமூகம் இரண்டுபடுகிறது. சமூகவிரோத சக்திகள் முஸ்லீம்களின் உயிர் உடைமைகளைச் சூறையாடுகின்றன.

பாகிஸ்தானிற்குச் செல்லும் ரயிலில் பிரயாணம் செல்பவர்களை கொல்வதற்குச் சதி நடக்கிறது. முஸ்லீம் பெண்ணைக் காதலிக்கும் ஒரு கிராமத்துச் சண்டியன் அந்தப் பிரயாணிகளை தனது உயிரைக் கொடுத்துக் காப்பாற்றுகிறான். குஸ்வந்சிங்கின் நாவலை அடிப்படையாகச் கொண்டு பமிலா றொக்ஸ் (PAMILA ROCKS) இப்படத்தை இயக்கியுள்ளார்.

22 யூன் 1897 திருநெல்வேலி மணியாச்சி யங்சனில் ஆஸ்துரையைச் சுட்டுக் கொன்ற வாஞ்சிநாதனை நினைவுபடுத்தும் குஜராத்தியக் கதை, இந்துத்துவ கருத்துத் தாக்கத்திற்குட்பட்ட பாலகங்காதர திலகரின் வழியைப் பின்பற்றிய சில இளைஞர்களைப் பற்றியது. பூனேப்பகுதியில் பிளேக் நோய் பரவியதை அடுத்து றாண்ட் (RANED) என்ற பிரிட்டிஸ் அதிகாரி இராணுவ சட்டத்தை பிரகடனப்படுத்தினான். மக்கள் மீது ஈவிரக்கமற்ற கெடுபிடிகள் மேற்கொள்ளப்பட்டன.

றான்டைக் கொல்லவதற்கு இந்த இளைஞர்கள் திட்டமிடுகின்றனர். திட்டமிட்டபடியே ரான்ட் கொல்லப்படுகின்றான்.

பிறவிண் (BREUIR) என்ற பொலிஸ் அதிகாரி உணர்ச்சிகளை வெளிக்காட்டாத தந்திரமான பேர்வழி. றான்டை கொலை செய்தவர்களைக் கண்டுபிடிக்கிறான். அவர்கள் தூக்கில் இடப்படுகின்றனர்.

மராடடிய மொழியில் எடுக்கப்பட்ட இந்த படம் மிகவும் உயிரோட்டமாக அமைந்துள்ளது.

நேரு படம் தகவல் படம் மாதிரித்தான் அமைகின்றது. ஆனால் சுதந்திரம் பெற்ற ஆரம்பநாட்களில் சுதந்திர இந்திய அரசின் கருவொன்றை உருவாக்க எவ்வளவு பிரச்சினைகளை எதிர்நோக்கினார்கள் என்பதனை சித்தரிக்கிறது.

முஸ்லீம் இந்து வன்முறைகளில் போது கை காட்டி பார்த்து நிற்கும் பொலிஸிடம் தடியைப் பறித்து கலவரத்தில் ஈடுபடுவோர் மீது நேரு தாக்குகிறார். மாபெரும் தலைவர்கள் எத்தகைய மானிட நேயமும் உறுதியும் கொண்டிருந்தார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டு. இப்படம் சியாம் பெனகலாலும், யூறி அல்டோக் கின் (YURI ATDORIN)என்னும் சோவியத் நாட்டவராலும் இயக்கப்பட்டது. ●

நான்
உதிர்ந்து
கொண்டிருந்தாலும்
உறங்கி
விடவில்லை
நகர்ந்து கொண்டே
இருக்கின்றேன்
தோல்வியின்
வடுக்கள்
தோள்களில்
கனமாக
கனத்தாலும்
புதிய சிறகுகளை
சேகரித்த வண்ணம்
“புதிய ஜெனநாயம்”
நோக்கி
ஓர்
புதுப்பார்வையுடன்.

இரா. சுதாசீலன்
நன்றி; எக்ஸில்

# நாட்டில் ஆதிக்கம் வகிக்கும் சில கருத்துக்கள் பற்றி

வடமேல் மாகாணசபைத் தேர்தலையடுத்து இந்த நாட்டில் நடைபெறும் வாதப் பிரதிவாதங்கள் ஜனநாயகம் பற்றியதாகவும், மக்களின் அடிப்படை உரிமை பறிக்கப்பட்டதாகவுமே பேசப்படுகிறது.

இந்தச் சின்னஞ் சிறிய தீவின் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் மனிதர்கள் வாழ்வதற்கான அடிப்படை நிலைகளே தகர்த்தெறியப்பட்ட நிலையில் வயம்பத்தேர்தல் வன்முறைகள், மீறல்கள் மிகமிக அற்ப்பமானவையே.

இந்தச் தேர்தல் வன்முறையின் பின்னர் அரசியல் தலையீடு இல்லாத சுதந்திரமான பொலீஸ், சுதந்திரமான தேர்தல் ஆணையாளர் பற்றியெல்லாம் பேசப்படுகிறது.

தவிர ஆளும் பொதுஜன முன்னணியின் அமைச்சர்கள் மட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தீவிர தேர்தல் சீர்திருத்தம் மேற்கொள்ளப்படவேண்டியதன் அவசியமும் அலசப்பட்டது.

விகிதாசாரத் தேர்தல் முறையில் உள்ள நபர்களுக்கான விருப்பு வாக்குமுறை ஒரே கட்சியைச் சேர்ந்த வேட்பாளர்களையே மோதல்களில் ஈடுபடத்தூண்டுவதாகயே அமைகிறது.

வேறு வேறு கட்சி சேர்ந்தவர்களாயின் பாரிய மோதல்களாக உருவாகிறது. இது நீதி அரசியல் விவகார அமைச்சர் பீரிஸ் அவர்கள், சமய கலாச்சார அலுவல்கள் அமைச்சர் லக்ஸ்மன் ஜெயக்கொடியும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

இவையெல்லாம் ஜனநாயகம் பற்றிய ஆரோக்கியமான கருத்துக்கள். ஆனால் அரசியல் தலைமைத்துவம் இல்லாத சுதந்திரமான பொலிஸ் துறை எத்தகைய பாரதூரமான விளைவை ஏற்படுத்தும் என்பது யாரும் அறியாததல்ல.

வயம்பத் தேர்தலைக் கண்காணித்த குழுக்களில் சில இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளன அவர்கள் இதயசுத்தியுடன் சுதந்திரமான வாக்களிப்பு இடம்பெறுவதற்கான நன்நோக்குடன் இதனைச் கூறியிருக்கலாம்.

பலர் தோற்றம் பெற்றதையும் யாரும் அறியாமல் இருக்க முடியாது.

"உடுகம்பொல" போன்ற முன்னாள் பொலிஸ் அதிகாரிகள், குற்றவாளிகள் பலர் ஜ.தே.கயின் மேடைகளில் தோன்றியதாக அறியமுடிகிறது. இது நிலைமையின் பயங்கரத்தையே கோடி காட்டுகிறது.

நிலைமை இவ்வாறிருக்கையில் சுதந்திரமான பொலிஸ் என்பது எத்தகைய் விளைவுகளை ஏற்படுத்தும் என்பதனைச் சற்று ஆழமாகச் சிந்திக்கவேண்டும்.

தவிர மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசினாலேயே சட்ட மொழுங்குத் துறை கண்டிப்பாக வழிநடத்தப்படவேண்டும். அவ்வாறில்லாமல் போகும்பட்சத்தில் நடைபெறப்போகும் நன்மை தீமைகளுக்கெல்லாம் மக்களுக்குப் பொறுப்புச் சொல்ல வேண்டிய அவசியத்தை பொலிஸ் துறை இழந்துவிடும்.

இங்கு ஏற்கனவே பொலிஸ்துறை இருக்கும் லட்சணமும், அதற்கு சுதந்திரமளிப்பதால் ஏற்படும் விளைவுகளும் எத்தகைய தாயிருக்கும் என்பதைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

எனவே இந்தக் கோரிக்கை எந்த நல்ல நோக்கத்திற்கான விடுக்கப்பட்டதோ எதிர்மாறான விளைவுகளையே ஏற்படுத்தும்.

பொதுஜன முன்னணி அரசு பதவிக்கு வந்ததன் பின் பொலிஸ் துறையைச் சீரமைப்பதிலும், மனித உரிமைகளை உறுதி செய்தற்கான குழுக்களை அமைப்பதிலும், தென் பகுதியில் நடந்த மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்கான குழுக்களை அமைப்பதிலும் கணிசமான முன்முயற்சிகளை மேற்கொண்டது என்பதனை நேர்மையாகச் சிந்திக்கும் எவரும் மறுக்க முடியாது.

அதே வேளை இந்த நாட்டின் வடகிழக்கு, மலையகத் தமிழ் மக்களுக்கெதிரான அளவுக்கதிகமான மனித உரிமை மீறல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதனை யாரும் இலகுவில் மறுத்துவிட முடியாது.

**சோமாலியக் குழந்தைபோன்ற ஒரு குழந்தைப்படம் எமது பத்திரிகைகளில் அண்மைக்காலத்தில் வெகு பிரபலமானது. இந்தக் குழந்தை பேரினவாதத்தால் மாத்திரம் உருவாக்கப்படவில்லை. தமிழ் பாசிசமும் இந்தக் குழந்தை உருவாக்கத்தில் பங்களித்திருக்கிறது. தற்போது தொலை தூரக்கிராமத்தில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் 10வயது தாண்டியவுடன் துப்பாக்கி ஏந்தி மரணிக்க வேண்டும் என்பது எழுதப்படாத விதியாகிவிட்டது.**

**தமது தலைமைத்துவத்தை தெரிவு செய்யும் உரிமை தமிழ் மக்களுக்கு மறுக்கப்பட்டது மாத்திரமல்ல இருந்த பாரம்பரிய தலைமைத்துவமும் புதியதலைமைத்துவமும் அழிக்கப்பட்டுள்ளது.**

ஆனால் அரச யந்திரத்தில் அது எந்த வர்க்கத்தின் அரசாக இருந்தாலும் பிரிக்க முடியாத அங்கமாக இருப்பதே யாதார்த்தம். அதற்கு அரசியல் வழிகாட்டல் இல்லையாயின் இந்நாட்டில் சிவில் அரசாங்கம் என்பதை இல்லா தொளிக்கும் போக்கிற்கே அது வழி வகுக்கும்.

ஏற்கனவே பொலீஸ் துறை சீரமைக்கப்பட வேண்டியதாகவும், மனோபாவ மாற்றத்திற்குள்ளக் காப்படவேண்டியதாகவுமே இருக்கிறது. 25வருடங்களுக்குமேலாக அது அவசர காலச் சட்டத்தின் கீழ் வரம்பிலா அதிகாரத்தைப் பெற்றிடுக்கிறது. அதனால் சீரழிந்த மனித முகத்தை இழந்த

**★ பொல்கொட வாவியில் மர்ம மான முறையில் பிணங்கள் மிதந்தது.**

**★ செம்மணி புதைகுழி விவகாரம் இழுபறியான நிலையை அடைந்திருப்பது.**

**★ வகைதொகையற்ற கைதுகள்.**

**★ அகதி முகாம்கள் தடுப்பு முகாம்களாக மாற்றப்பட்ட நிலமை.**

**★ தமிழர்களுக்கென்றே பிரத்தியேகமாக உள்ள 'பாஸ்'முறைகள்.**

இவை மக்களிடையே வெறுப்பையும், சினத்தையும் ஏற்படுத்தியுள்ளன.

வடகிழக்கு மலையகப் பகுதிகளில் முஸ்லீம் மக்கள் மத்தியில் பாரிய அதிருப்தி நிலவுகிறது.

இந்த அதிருப்திகள் உணர்வு பூர்வமாக கவனத்திற் எடுக்கப்பட்டாக வேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினர்



நாலந்த எல்லாவல படுகொலை வயம்பத்தேர்தல் வன்முறைகள் கருத்திற்கெடுக்கப்பட்டளவிற்கு வடகிழக்கில் நாளாந்தம் நடக்கும் மரணங்களும், வன்முறைகளும் கருத்துக்கெடுக்கப்படவில்லை. இதுவே இந்த நாடு மனதளவில் இரண்டு பட்டுப்போவதற்கான நிலவரங்களைத் தோற்றுவிக்கும்.

**சத்தியன்**

வடகிழக்கு அனர்த்தங்கள் எதோ மாமூலானவை நாட்டின் ஏனையபகுதியில் நடப்பவை அசாதாரணமானவை. என்ற பாரபட்சமான போக்கு தொடர்ந்து நிலவுகிறது. தமிழர்களின் துயரம் அவர்களின் விதி என்ற போக்கே மேலோங்கிக் காணப்படுகிறது.

இத்தகைய சூழ்நிலையில் அரசியல் சமூக அரங்கை ஜனநாயகமயப்படுத்தல், மனித உரிமைகளை உறுதிப்படுத்தல் ஆகிய விடயங்கள் நாடளாவிய அளவிலேயே மேற்கொள்ளப்பட வேண்டும்.

**புலிகளால் உருவாக்கப்பட்ட ஏகப்பிரதிநிதித்துவக் கொள்கையை இன்று தமிழ்ச்சமூகத்தில் கேள்விக்கிடமில்லாமல் செய்யும் விடயம் தமிழ்த தகவல் துறை உட்பட பல்வேறு அரங்குகளில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகிறது. இது 1930களில் நடுப்பகுதியிலிருந்து இரண்டாம் உலக யுத்தத்தன் முடிவுவரை ஜேர்மனியில் நிலவியதை ஒத்ததாகும்.**

**ஆனால் எமது தமிழ்சமூகத்திலோ இரண்டு தசாப்தங்களாக இது நீடித்து நிலவுகிறது. மாற்றுக் கருத்துக்கொண்டோரை அழித்தல் என்பது இயல்பான விடயம் என்பது போல் எமது சமூகத்தில் ஆகிவிட்டது. ஆதிக்கம் வகிக்கும் கருத்து அது தான். அது சமூகம் முழுவதன் மேலும் திணிக்கப் பட்டிருக்கிறது.**

உள்ளூரிலும் ,சர்வதேச அரங்கிலும் அதற்காதரவாகப் பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது. இதனை விரும்பாத பெருவாரியான மனிதர்கள் தமக்குள்ளேயே குமைந்து பெரும் உள, உடல் பாதிப்புக்களுக்கு உள்ளாகியிருக்கிறார்கள்.

பேரினவாதிகளின் ஒடுக்குமுறைக்குப் பலியானவர்களின் தொகைக்கு ஒப்பான தொகையினர் இந்த மாறுபட்ட கருத்துக்காக, செயற்பட்டிற்காகப் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். கல்வி, காலாச்சாரம், பொருளாதாரம் உட்பட சகல துறைகளிலும் இந்த பாசிசப் போக்கு பாரிய பின்விளைவுகளைத் தோற்றறுவித்துள்ளது.

சுதந்திரமான தேசம் என்பதைவிட தலிபான்களின் ஆதிக்கத்தின் கீழுள்ள ஆப்கானிஸ்தானை விட மோசமான ஒரு தேசமே இந்தப் போக்கின் விளைவாக உருவாக முடியும்.

**சோமாலியக் குழந்தைபோன்ற ஒரு குழந்தைப்படம் எமது பத்திரிகைகளில் அண்மைக்காலத்தில் வெகு பிரபலமானது. இந்தக் குழந்தை பேரினவாதத்தால் மாத்திரம் உருவாக்கப்படவில்லை. தமிழ் பாசிசமும் இந்தக் குழந்தை உருவாக்கத்தில் பங்களித்திருக்கிறது. தற்போது தொலை தூரக்கிராமத்தில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் 10வயது தாண்டியவுடன் துப்பாக்கி ஏந்தி மரணிக்க வேண்டும் என்பது எழுதப்படாத விதியாகிவிட்டது.**

**தமது தலைமைத்துவத்தை தெரிவு செய்யும் உரிமை தமிழ் மக்களுக்கு மறுக்கப்பட்டது மாத்திரமல்ல இருந்த பாரம்பரிய தலைமைத்துவமும் புதிய தலைமைத்துவமும் அழிக்கப்பட்டுள்ளது.**

அண்மையில் யாழ்குடாநாட்டில் உள்ளுராட்சி சபைகளுக்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களும் நாளாந்தம் கொல்லப்படுகிறார்கள். இது யாழ்குடாநாட்டில் வாழும் 50% க்கு மேலான வாக்குரிமை பெற்ற மக்களின் உணர்வுகளுக்குமேல் தொடுக்கப்பட்ட அச்சுறுத்தலுமாகும்.

நாட்டில் ஜனநாயகம், மனித உரிமைகளை உறுதிசெய்வதானால் வடகிழக்கில் நிலவும் இந்த சூழ்நிலை தொடர்பாகவும், நாடுபூராவும் உருக்கொண்டிருக்கும் வன்முறைச் காலாச்சாரத்திற்கெதிராகவும் செயற்பட்டாக வேண்டும்.

**மாறுபாட்ட கருத்துக்கள் ஆளும், எதிர்க்கட்சிகள் என்பன செயற்படுவது ஜனாநாயகம் நிலை நிறுத்தப்படுவதற்கு இன்றியமையாதன.**

தற்போது ஆளும் கட்சி எதிர்க்கட்சி இல்லாத தேசிய அரசாங்கம் ஒன்றின் உருவாக்கம் பற்றிய கருத்து நிலவுகின்றது. இதுவும் அடிப்படையிலே தவறான ஒன்றாகும்.

வேறுபட்ட கட்சிகள், இயக்கங்கள் நாட்டின் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகளில் பொறுப்புணர்வுடன் இணைந்து செயற்படுது என்பது நவீன யுகத்தின் முக்கியமானதொரு அம்சம். ஆனால் இங்கு அரசியல் அரங்கில் அத்தகைய நாகரிகமான போக்குகள் இன்னும் உருவாகவில்லை.

நாட்டையே எரித்துக் கொண்டிருக்கும் பிரச்சினைகளில் இதயசுத்தியான அணுகுமுறை இல்லாத சந்தர்ப்பவாத, இனவாத போக்குள்ளதான் மேலோங்கிக் காணப்படுகின்றன. இத்தகைய மக்களின் ஜீவாதாரமான பிரச்சினைகளில் இணைந்த பொறுப்புனர்வுடன் கூடிய போக்கை இலங்கையின் அரசியல் சக்திகள் கடைப்பிடிக்க வேண்டும்.

மற்றும்படி அரசின் தவறுகளைக் சுட்டிக்காட்டுவதும் சரியான திசை வழியைக் காட்டுவதும் எதிர் அணி அரசியல் கட்சிகளின் கடமை. அரசின் பாரதூரமான செயற்பாடுகளை அம்பலப்படுத்துவம் அதற்கெதிராக ஜனநாய வழிகளில் போராடுவதும் அவசியமானது.

அப்போதுதான் அரசின் செயற்பாடுகளையும் சரியான திசைவழி நோக்கி நிர்ப்பந்திக்க முடியும்.

ஆளும் கட்சி எதிர்க்கட்சிகளின் செயற்பாடுகள் இல்லாத சூழ்நிலை இலங்கை போன்ற நாடுகளில் சர்வாதிகார சக்திகள் தலையெடுக்க வழிவகுக்கும்.

தொடர்ச்சி 11ம் பக்கம் ☞

# வவுனியா சகோதரச் சண்டை

**எஸ்.திருநாவுக்கரசு**

வவுனியாவில் பொருட்களுக்கு வரி விதிப்பு தொடர்பான ஒரு தகராறு பெரும் இயக்க மோதலாக உருவெடுத்தது. இதில் இரண்டு இயக்கங்களைச் சேர்ந்த இரண்டு மாணவர்களும், வான் சாரதியான 5 பிள்ளைகளின் தந்தையும், வவுனியா பல்கலைக் கழக மாணவரும், பாடசாலை ஆசிரியருமான ஒருவரும், மற்றும் மூன்று இயக்க உறுப்பினர்களும் பலியாகினர்.

ஒரு வாரத்துக்கு மேலாக தொடர்ந்து நடத்த மோதலில் வவுனியா பீதியில் உறைந்து விட்



டது. மக்கள் வீடு வாசல்களை விட்டு வெளியே வர அஞ்சினார்கள். கடைத்தெரு வெறிச்சோடியது.

தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கவேண்டிய இயக்கங்கள் இவ்வாறு ஒருவரை ஒருவர் உடல் மீதியின்றி அழிக்கும் போக்குத்தான் எமது சமூகத்தின் துயரமான அவலமான இன்றைய வாழ் நிலைக்குப் பிரதான காரணமாகும். பேரினவாத ஒடுக்குமுறைகெதிராகவும், சமூகஏற்றத்தாழ்வினைக் களைவதற்காகவும் போராடப் புறப்பட்ட இயக்கங்கள் தங்களுக்குள் மோதிக்கொள்வது நிச்சயமாக தமிழ் மக்களுக்குப் பெரும் துயரத்தை ஏற்படுத்தும் விடயமாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளால் ஆரம்பிக்கப்பட்ட சகோதரப் படுகொலைத்தாக்குதல் இன்று தமிழ் அரசியல் அரங்கில் பல்வேறு உருவங்களை எடுத்துள்ளது. அது இயக்கங்களிடையேயான மோதலாக மாத்திரமல்ல தனி மனிதர்க்ளிடையேயான மோதலாக சீரழிந்துள்ளது.


இந்த மோதல்களின் பின்னணியில் பாரிய காரணங்கள் எதுவுமில்லை. எமது சமூகம் வெட்கித் தலைகுனியுமளவிற்கு எமது சமூகத்தில் உயர்ந்த அரசியல் பண்புகள் அருகியதும், அனுபவ மின்மையும், ஆயுத காலச்சாரத்தின் ஆதிக்கத்திமும் தான் இத்தகைய நிலவரங்களைத் தோற்று விக்கின்றது. முதலில் தமிழ் அரசியல் கட்சிகள் தமக்கிடையேயான முரண்பாடுகளை நேரடியாகப் பேசுதல், கலந்துரையாடல்கள் மூலம் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

மிகமோசமான போக்குகள் நிலவுமானால் விமர்சித்தல், அம்பலப்படுத்தல் ஆகிய முறைகளும் உண்டு. மிக இக்கட்டான இன்றைய சூழ்நிலையில் தவறுகளை திருத்தி தோழமையுடன் இயங்குவதற்கான முதிர்ச்சியை தமிழ்க் கட்சிகள் காட்ட வேண்டும்.

இன்று தமிழ்க்கட்சிகள் பத்திரிகைகளில் அவதூறுகளுக்கும்,இழிவுபடுத்தல்களுக்கும் உட்படுத்தப்படுகின்றன. நேர்மையாக பாரபட்சமின்றி பொறுப்புணர்வுடன் தமிழ்ப்பத்திரிகைகள் பிரச்சினைகளை நோக்குவது அரிதாகவே காணப்படுகின்றது.

ஆனால் தமிழ் மக்களின் பொதுவான அபிலாசைகளை எல்லாம் மறந்துவிட்டு மோதமுற்பட்டால் அது சந்தேகத்துக்குரியதாகவும் கேள்விக்குரியதாகவுமே இருக்கும். தமிழ்க்கட்சிகள் ஒவ்வொன்றும் தாம் எதுவித தவறுகளை இழைக்கவில்லையா என்பதனை நெஞ்சைத்தொட்டு கேட்கவேண்டும். அத்தகைய நேர்மையான கேள்வியே ஒரு ஆரோக்கியமான அரசியல் அரங்கை உருவாக்க வழிவகுக்கும்.

**எமது சமூகம் தென்னாசியாவிலேயே கல்வி கேள்விகளில் சிறந்த சமூகம் என்ற பெருமை கொண்டது. ஆனால் அந்த சமூகத்தில் இன்று இருக்கும் அரசியல் தலைமைத்துவங்களைப் பற்றி எண்**



**ணிப்பார்க்கும் போது வேதனையே எஞ்சுகின்றது. பல சிறந்த தலைவர்கள் புலிகளால் அழிக்கப்பட்டு விட்டார்கள். மற்றும் சில தலைவர்கள் பல்வேறு இயங்கங்களின் செயற்பாடுகள் முரண்பாடுகளின் போது கொல்லப்பட்டு விட்டார்கள். இருக்கும் தலைமைத்துவங்கள் ஒரு சமூக நோக்குக் கொண்ட அரசியல் கட்சிக்கு இருக்க வேண்டிய சிறந்த பண்புகளை இழந்து நிற்கின்றன. என்பது துரதிஸ்டமான உண்மையாகும். தமிழ் அரசியல் கட்சிகள் தமது இருப்பு எதற்காக? தாம் எப்படி சமூகத்தின் முன்னிலையில் நடந்துகொள்கின்றோம், எப்படி நடக்க வேண்டும் என்பதை எல்லாம் சற்று எண்ணிப்பார்க்க வேண்டும்.**

மக்கள் தாமாக முன்வந்து செய்யும் நிதி உதவிகளிலேயே உலகின் மாபெரும் அரசியல் இயக்கங்கள் செயற்பட்டிருக்கின்றன.


இயக்க மோதல் பூதாகரமாக உருவெடுக்க முன்னர் தமிழர் இயக்கங்களுக்கு எமது மக்கள் உணவும், இருப்பிடமும், நிதியும் அளித்தார்கள். ஏன் எமது மக்கள் இந்தியா சென்ற போது, எமது இயக்கங்கள் அங்கிருந்து செயற்பட்ட போது தமிழ் நாட்டு மக்கள் ஆதரவு காட்டினார்கள்.

தமிழர் ஆயுதம் ஏந்திய இயக்கங்களின் உருவாக்கத்திற்கு முன்னர் தமிழரசுக்கட்சி, இடதுசாரி இயக்கங்களுக்கு மக்களிடம் இருந்து பொருளாதார நிதி ஆதாரங்கள் கிடைத்தன. ஆரம்பகாலங்களில் சில இயக்கங்கள் வீடுவீடாகச் சென்று மக்களிடம் நிதி, பொருளாதார உதவிகளை பெற்றதோடு தமது பிரசுரங்கள் பத்திரிகைகளை வீடு வீடாக சென்று விற்பனை செய்தன.

இன்று மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) போன்ற அமைப்புக்கள் மக்கள் கூடும் இடங்களான பஸ் நிலையங்கள், நாற்சந்திகள், ரயில் நிலையங்களில் உண்டியல் குலுக்கி நிதி சேகரிக்கின்றன. இத்தகைய முறைகள் மக்களிடம் உறவுகளை பேணுவதற்கு வழிவகுப்பதோடு, மக்களுக்கு விசுவாசமாக இருக்கவும் கட்சி உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்கிறது.

ஆனால் எமது பிரதேசங்களில் ஏற்பட்ட ஜனாநாயக மறுப்பு சூழ்நிலையே பல இயக்கங்கள் மக்களிடம் செல்ல முடியாத நிலையை உருவாக்கியது. அதுமாத்திரமல்லாமல் தவறுகளை சுட்டிக்காட்டுவதற்கு மக்களுக்கு உரிமையில்லாமல் போனபோது தவறுகள் மேலும் அதிகரித்தன. இது"லும்பன்" அரசியல் கலாச்சாரத்திற்கு வழிவகுத்தது.

வவுனியாவின் நேர்த்தியான வாழ்வு தற்போது ஒரேயடியாக சீர்குலைந்துள்ளதென்றே கூற வேண்டும். பல்வேறு ஆயுதம் ஏந்திய சக்திகள், ஆட்க்கள் காணாமல் போதல், வரி வசூல், லஞ்சம், திடீர் தீடீரென யாராவது வீதியில் சுட்டுவீசப்படுவது வவுனியாவை ஒரு சிறிய பாதாள உலகராச்சிய



மாகவே சித்தரிக்கிறது. கொலை, கொள்ளைக்கு பேர்போன கொலம்பியாவின் நிலை வவுனியாவின் நிலையாகும்.

இதைவிட முகாம்களில் அடைபட்டிருக்கும் அகதி மக்கள் அரசு கட்டுப்பாட்டில் உள்ள, கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகள் என்ற இருவேறு பகுதிகளுக்கும் இடையேயான மக்கள் போக்குவரத்துப் பிரச்சினைகள், 'பாஸ்' பிரச்சினை, வைத்திய வசதிகள் பற்றாக்குறை என்பவையும் வவுனியா எத்தகைய நோய்கண்ட பிரதேசமாக மாறியுள்ளது என்பதற்கு உதாரணங்களாகும்.

சட்டம் ஒழுங்குக்கு பொறுப்பானர்வகள் கண்டும் காணாதவர்கள் போல் நடந்துகொள்கின்றார்கள்.

இங்கு நடைபெறும் மனித உரிமை மீறல்கள், ஜனநாயக விரோத நடவடிக்கைகள் அரசினால் கண்டுகொள்ளப்படாதது மக்கள் மத்தியில் பெரும் அதிர்ப்தியை ஏற்படுத்தியுள்ளது. இங்கு ஜனநாயகத்தை நிலை நிறுத்துவதிலும் மனித உரிமைகளை உறுதி செய்வதிலும் அரசு தனக்குள்ள பொறுப்பை தட்டிக்கழித்து விடமுடியாது.

வடகிழக்கில் ஒரு ஆரோக்கியமான அரசியல் சமூகக்களம் உருவாகுவதற்கு சகல அரசியல் கட்சிகளும், சமூக அபிமானிகளும், சமூகத்தின் சிறந்த பிரசைகள் என கருதப்படுவோரும் முன்வரவேண்டும்.

இயக்க மோதல்கள் தொடர்பாக வவுனியா அரச அதிபரால் கூட்டப்பட்ட ஓர் மகாநாட்டில் பல்வேறு திணைக்களகளங்களின் தலைவர்கள் உட்பட வவுனியாவில் முக்கியமான பிரசைகள் எனக் கருதப்படும் பலர் அழைக்கப்பட்டனர். ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள், சட்டத்தரணிகள், பத்திரிகையாளர்கள், சமூக சேவர்கள், சர்வமதகுருமார்கள் என பலதிறத்தார்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள்.

1. மாணவர்கள் இயக்கங்களில் சேர்ந்து பலியாவதையிட்டு விசனம் தெரிவிக்கப்பட்டது.

2. வவுனியாவில் மேற்கொள்ளப்படும் வரிவிதிப்புக்கள் நிறுத்தப்படவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

மாணவர்கள் பலியானமை, வவுனியாவில் பாடசாலைகளில் கல்வி சீர்குலைத்தமை நாற்பதிற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்கு வருவதை நிறுத்திக்கொண்டமை இன்னோரன்ன பிரச்சினைகள் சுட்டிக்காட்டப்பட்டன.

உண்மையில் மாணவர்களின் கல்விக்கு இடையூறுவிளைவிப்பதும், இயக்க அரசியலில் ஈடுபடும் மாணவர்கள் கோஷ்டிகளாக பிரிந்து மோதல்களில் ஈடுபடுவதும். இதனால் கல்வி ஸ்தம்பிதம்



அடைவதும், நிலவரத்தை ஆசிரியர்களோ, பெற்றோர்களோ கட்டுப்படுத்த முடியாத நிலமை உருவாகுவதும் சமூக சீரழிவிற்க்கே வழிவகுக்கும்.

ஏற்கனவே கல்வியில் மோசமான பின்னதங்கலை அடைந்துள்ள எமது சமூகத்திற்கு, எமது எதிர்கால சந்ததிக்கு இது பெரும் அனர்த்தங்களை ஏற்படுத்தும். இதில் இரண்டுபட்ட கருத்துக்கு இடமில்லை.

ஆனால் இந்தக்கூட்டங்களில் கருத்திற்கு எடுக்கப்படவேண்டிய முக்கியமான விடயம் தவறவிடப்பட்டிருக்கிறது. வன்னிப்பகுதியில் பெருந்தொகையில் மாணவர்கள் யுத்த யந்திரதின் அங்கமாக மாற்றப்பட்டிருப்பதும் அதில் பல மாணவர்கள் பலியாகியிருப்பதும், தொடர்ந்து யுத்தத்தில் ஈடுபடுவதற்கு மாணவர்கள் ஊக்கப்படுத்தப்படுவதும் கருத்திற்கெடுக்கப்படவில்லை.

மாணவர்கள் அரசியலில் ஈடுபடுத்தப்படக்கூடாது என்பது இன்றைய சூழ்நிலையில் பொருத்தமற்ற கருத்தாகும். இன்றைய சூழ்நிலையில் எமது மாணவர்களுக்கு முதன்மையான விடயம் கல்வியே.

அதற்காக சமூகத்தின் மீது அவர்கள் அக்கறை கொள்ளாமல் பாடசாலைச் சுவர்களுக்குள் மாத்திரம் முடங்கிவிடவேண்டும் என்ற கருத்து கிணற்றுத்தவளைகளையே உருவாக்கும். மாணவர்கள் தவறான வழிமுறைகளால் பலியாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதற்காக உயர் வகுப்பு மாணவர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது என்பது அடிப்படையிலேயே தவறானதாகும்.

ஒரு ஒடுக்குமுறைக்கு உட்பட்ட சமூகத்தில் மாணவர்கள் அந்த ஒடுக்குமுறைகளுக்கு எதிராக முக்கிய பாத்திரத்தை வகிப்பார்கள். இளவயது அடக்குமுறைகளுக்கு அடிபணியாத தன்மையும், பாரபட்சங்களுக்கு எதிரான தார்மீக கோபத்தையும் கொண்டது.

தென்னாபிரிக்க நிறவெறி ஆட்சிக்கு எதிரான போராட்டத்தில் தென்னாபிரிக்கா மாணவர்களின் பாத்திரம் மறுக்க முடியாதது.


வங்கதேசத்தின் சுதந்திரப் போராட்டத்தில் மாணவர்கள் வகித்த பங்கு யாவரும் அறிந்ததே.

தமிழ்நாட்டில் தந்தை ஈவோரா பெரியாரின் மூடநம்பிக்கைகள், தீண்டாமை, பெண்ணடிமைத்தனம் இவற்றுக்கெதிரான போராட்டங்களில் மாணவர்களின் பங்கு மகத்தானது.

அறுபதுகளின் முற்பகுதியில் வடகிழக்கு பூராவும் நடைபெற்ற சக்தியாக்கிரக இயக்கத்திலும், அறுபதுகள் பூராவும் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு வெகுஜன போராட்டங்களில் மாணவர்களின் பங்கு குறிப்பிடத்தக்கது.

எழுபதுகளின் முற்பகுதியில் இனரீதியான பாரபட்சங்கள், கல்வியில் இனரீதியான கொள்கைகள் கடைக்கப்பட்ட போது மாணவர் பேரவை என்ற அமைப்பு தமிழ் மாணவர் மத்தியில் உருகியது. இதுவே எதிர்காலத்திற்கான இளைய தலைவர்களையும் உருவாக்கியது.

தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் ஆயுதம் ஏந்திய போராட்டமாக மாறிய போது மாணவர்கள் அணியாக மாறுவதிலும், ஒடுக்கப்பட்ட வெகுஜனங்களை அணி திரட்டுவதிலும் ஈழ மாணவர் பொதுமன்றம் குறிப்பிடத்தகுந்த பாத்திரத்தை வரலாற்றில் வகித்தது. இதுவும் ஆற்றல் வாய்ந்த மனிதர்களை சமுகத்திற்கு



உருவாக்கித்தந்தது.

**பரந்த நோக்கங்களுக்கு அப்பால் கொச்சையான குறுகிய எண்ணங்களுக்காக மாணவர்கள் கோஸ்டி சேர்க்கப்படுவது ஒரு பாரதூரமான குற்றச்செயலாகும்.**

**எமது மாணவர்களின் சக்தி என்ன என்பதை புரிந்து கொண்டு தக்கவாறு கையாள வேண்டும். மாணவர் சமூகத்தின் அழிவு ஒரு அறிவுப் பாலைவனத்தை எமது சமூகத்தில் உருவாக்கிவிடும். இதனைச் சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.**

வவுனியாவுக்குள் நடைபெறும் வரிவசூல்கள் மாத்திரமல்ல, வர்த்தகர்கள் கடத்தல், லாறிகளுடனேயே மொத்தமாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பி வைக்கப்படும் பொருட்கள் கடத்தப்படும் சம்பவங்கள் வன்னிப் பகுதியில் சாதாரணமாகவே நடைபெறுகின்றன.

பொதுமக்களுக்கு கிடைக்க வேண்டிய அத்தியாவசிய பொருட்களை கொழும்பு விலைக்கு கொள்வனவு செய்து வன்னி விலைக்கு விற்பதும் ஒவ்வொரு அத்தியாவசிய பொருளின் மீதும் அரசின் வரிகளுக்கு மேலாக சட்டவிரோதமான வரிகள் மோசமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

அது வெளிப்படையாக மக்களை சுரண்டும் அல்லது மக்களின் வயிற்றிலடிக்கும் நடவடிக்கையாகும்.

இந்த அத்தியாவசிய பொருட்கள் மீதான வரிகள் மக்களின் நலனில் அக்கறையுடையவர்களால், உயர்ந்த லட்சியங்கள் கோட்பாடுகள் உடையோரால் மேற்கொள்ளப்பட முடியாதவை.

அதுவும் இவற்றுக்காக ஏற்படும் மோதலில் பொதுமக்களோ, அல்லது மாணவர்களோ பலியாவது மிகுந்த வேதனையும் விசனத்தையும் ஏற்படுத்துவதாகும்.

எமது அரசியல் சமூகத் தளத்தில் ஏற்பட்டிருக்கும் நோயை கோடிட்டுக்காட்டும் இம் மோதல்களை நிறுத்துவதற்கும் உயர்ந்த அரசியல் கலாச்சாரம் ஒன்றை உருவாக்குவதற்கும் சமூக நலனில் அக்கறை கொண்ட பல்வேறு பிரிவினரும் இணைந்து செயற்பட வேண்டும். அதற்கு எமது பரிபூரண ஒத்துழைப்பு என்றென்றும் உண்டு. ●

புலிகள் எதிர் இராணுவம்

# வன்னியின் யுத்த முனையில் மாறிவரும் உபாயங்கள்

படையினரின் ரணகோஷ -1,2 இராணுவ நடவடிக்கை மூலம் வன்னிப் பெருநிலத்தில் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்கள் படிப் படியாக பறிபோய்க்கொண்டிருக்கும் நிலைமை-அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் கால்வைப்பதற்கே அஞ்சிய படையினர் இன்று சர்வ சாதாரணமாக கால்பதித்து முன்னேறும் மன உறுதி-இந்த படை நகர்வை தடுத்து நிறுத்த முற்படாமல் புலிகள் பின்வாங்கிச் செல்லும் இயலாமை-போன்ற யுத்த நிகழ்வுகளை அவதானிக்கும் போது பல கேள்விகள் ஏழாமல் இருக்க முடியாது.

**★ புலிகள் பலமிழந்து பின்வாங்கிச் செல்கிறார்களா!**

**★ படையினரின் நகர்வுகளை அவதானித்து-அவர்களை உள்ளே வரவிட்டு தாக்குவதற்கு தயாராகிறார்களா!**

**★ ஆள் பற்றாக்குறையால் அவதிப்படும் தமது நெருக்கடியை வெளிப்படுத்தி நிற்கிறார்களா!**

**★ புலி பதுங்குவது பாய்வதற்கே! படையினர்க்கு எதிரான மிகப் பெரிய தாக்குதலை தொடுப்பதற்கு பதுங்குகிறார்களா!**

**★ படையினருடன் நேரடி மோதல்களை தவிர்த்து-புதிய தந்திரோபாயத்தை கடைப்பிடிக்கிறார்களா!**

**★ புலிகள் தமது முழுப்பலத்தையும் ஒன்று திரட்டி வன்னியின் கிழக்கு நோக்கி தமது புலிப்படை அணியை நகர்த்தி கடைசி யுத்தத்திற்கு தயாராகிறார்களா!**

இவ்வாறான கருத்துக்கள் பல பொதுவாக இருந்தாலும் புலிகளின் எதிர்கொண்டு தாக்கும் போர்க்குணாம்சம் சமீபகாலங்களில் குறைந்திருப்பது தளர்ந்திருப்பது அவர்கள் பற்றிய ஒரு சந்தேகத்தை முதன் முதலாக எழுப்பியிருக்கிறது. இருப்பினும் புலிகளின் உண்மையான பலம்-பலவீனங்கள் பற்றி ஒரு மதிப்பீட்டை இதுவரை ப்டையினரின் உளவுத்துறையால் கண்டுபிடிக்க முடியவில்லை.



இதனால் புலிகள் நாளை என்ன செய்வார்கள் என்ற அச்சம் இன்றும் படையினர் மத்தியில் இருப்பது வியப்பானதல்ல. இந்த அச்சநிலைமை அதிகாரிகள் மட்டத்திலும் பலமுறை விவாதத்திற்கு எடுக்கப்பட்டிருக்கின்றன.

சென்றவருட இறுதியில் படையினர் நிலை கொண்டிருந்த கிளிநொச்சி மீதான பெரும் தாக்குதலைக் குறிபிட்டுச் சொல்லலாம். அதன் இழப்புகளின் கணக்கீடுகள் படை அதிகாரிகளால் இன்றும் மூடிமறைக்கப்படுகின்றன. அதன் இழப்புக்களை அவர்களால் மறைக்கமுடியாது. அந்த அளவுக்கு அகோரம். உயிர்ச்சேதம்-உடல் சேதம்-பொருள் சேதம் (இராணுவத்தளபாடங்கள்) முல்லைத்தீவு முகாமின் இழப்பைவிட அதிகமென்ற கருத்தும் நிலவுகின்றது.

ரணகோஷம் ஆரம்பமாகி மாதம் ஒன்றாகியும் படையினரின் படை நகர்வை தடுத்து நிறுத்தாது-வேறு பக்கம் புலிகள் தமது பலத்தைக் காட்டியிருக்கிறார்கள்.

மார்ச் 17ம் திகதி இரவு தள்ளாடி முகாம் முழுவதும் ஷெல் மழை பொழிந்து தங்களிடம் பல குழாய் பொருத்தப்பட்ட நீண்ட தூர லோஞ்சர்கள் (MULTI BARREL LAUNCHERS) தயார் என்று படையினருக்கும்-அரசுக்கும் எச்சரித்திருக்கிறார்கள். இந்த தாக்குதல் யுத்த முனையில் ஒரு வடிவத்தையும்-தொழில் நுட்பத்தையும் காட்டி நிற்கின்றது. எதிர் காலத்தில் படையினருக்கு பாரிய அழிவுளை ஏற்படுத்தும் என்பதும், அதன்மூலம் புலனாகியிருக்கும் ரகசியமாகும்.


எந்த நேரமும் இப்படியான ஒரு ஆபத்தை எதிர்நோக்கியிருக்கும் படை அதிகாரிகள்-ஆளில்லாத விமானமூலம் புலிகளின் நிலைகளை வேவுபார்த்து விமானத்தாக்குதல் தொடுத்து வருகிறார்கள். அதேநேரத்தில் வன்னிப்பகுதியின் வடமேற்கு திசையில் தமது படைஅணிகளையும் நகர்த்தி இருக்கிறார்கள்.

புலிகளின் எதிர்தாக்குதலின்றி பூவரசங்குளம்-இரணை இலுப்பைக்குளம்-மூன்று முறிப்பு-மடு -பெரியமடு-பண்டிவிரிச்சான்-பாலம்பிட்டி அடங்கலான 1000 சதுர கிலோமீற்றர் பிரதேசத்தை படையினர் கைப்பற்றி நிலை கொண்டிருக்கிறார்கள்.

நீண்ட காலம் படையினரைப் பார்த்திராத அப்பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் ஒரு விதகலக்கத்துடன் இருந்தாலும் இடம்பெயராமல் இருந்தை குறிப்பிட்டு சொல்ல வேண்டும். கிட்டத்தட்ட 20ஆயிரம் மக்கள் இருப்பதாக கணக்கிடப்பட்டிருக்கிறது.

மேலும்-வடக்கு-வடமேற்கு நோக்கி முன்னேறுவதற்கான தயாரிப்பு வேலைகள்-சுறுசுறுப்பாக நடைபெறுவதாக யுத்த முனையில் இருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

வன்னியின் மேற்கு நிலப்பிரதேசமும்-மேற்குகடற் கரைப்பகுதியும் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படும் ஒரு இலக்கை நோக்கி படை அணிகள் நகர்த்தப்படுவதாக சில இராணுவ ஆய்வாளர்கள் பத்திரிகைகளில் எழுதியிருக்கிறார்கள். அது உண்மையாகவும் இருக்கலாம்.



இலங்கையில் இந்திய அமைதிப்படை இருந்த காலத்தில் அதன் கட்டளைத் தளபதியாக இருந்த கல்கட் அவர்கள் ரணகோஷ படைநகர்வை விமர்சித்திருக்கிறார். ஒரு தவறான இலக்கு நோக்கி படை நகர்வதாகவும் கூறியிருக்கிறார். மன்னார் பூநகரி-யாழ்ப்பாணம் வீதியை கைப்பற்றுவதை விட கண்டி-யாழ் வீதியை கைப்பற்றுவதே நீண்ட காலம் நிலைத்து நிற்கக்கூடிய இராணுவ வெற்றியாக இருக்கும் என்றும் தனது அனுபவத்தின் ஊடாக கூறியிருக்கிறார். அவரின் இந்தக் கூற்றை நிராகரித்து ஒதுக்கவும் முடியாது.

இருப்பினும்-இன்றைய இராணுவ மதிப்பீட்டில் படையினரும்-புலிகளும் ஆள்பற்றாக் குறையினாலேயேதத் தமது இராணுவ தந்திரோபாயங்களை மாற்றியிருக்கிறார்கள்.

யாழ்-கண்டி வீதியை திறக்கும் ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கையில் பல நூற்றுக்கணக்கான படையினரையும்-நன்கு பயிற்சி பெற்ற பல திறமை வாய்ந்த அதிகாரிகளையும் இழந்ததும் அதே காலப்பகுதியில் புலிகள் நடத்திய மூர்க்கத்தனமான கிளிநொச்சி தாக்குதலில் நிலை குலைந்துபோன தன்மையும் படை அதிகாரிகள் மத்தியில் ஒரு மாற்று யோசனைக்கு வழிதேடவைத்தன. அதன் விளை வாகவே இன்றைய இராணுவ நடவடிக்கையாகும்.

பெரும் உயிர் இழப்பில்லாமல் எப்படி புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களை கைப்பற்றுவது-படை வீரர்கள் மத்தியில் மன உறுதியையும்-உற்சாகத்தையும் எப்படி ஏற்படுத்துவது என்ற கட்டாயம்தான் இந்த இராணுவ நடவடிக்கையாகும்.

வன்னிக்கு வடகிழக்கே நடைபெற்ற 'ரிவிபல' இராணுவநடவடிக்கையும் வன்னிக்கு வடமேற்கே தற்போது நடைபெற்ற ரணகோஷ ராணுவ நடவடிக்கையும் படையினருக்கு ஏற்பட்டிருக்கும் ரணத்தை ஆற்றுவதற்கான நடவடிக்கையாகும். இந்தப்படை நகர்வின் போது எதிர்தாக்குதல்கள் பெருமளவில் இல்லாமல் இருந்தது, படை அதிகாரிகளுக்கு ஆச்சரியத்தையும்-ஆறுதலையும் கொடுத்திருந்தது. மேற்கொண்டும் வடக்கு-வடமேற்கு நோக்கி படை அணிகளை நகர்த்தலாம் என்ற யோசனைக்கும் வழிவகுத்திருக்கிறது.

இதன் போக்கில் தொடர்ந்து -புலிகளின் பாரிய எதிர்ப்பின்றி வன்னியின் மேற்கு நிலப்பரப்பும் -மேற்கு கடற்கரைப்பகுதியும் படையினரிடம் வீழ்ச்சியடைந்தால் புலிகளுக்கு எதிரான இராணுவ பின்னடைவுகளை பின் வருமாறு குறிப்பிடலாம்.

**★ மன்னார்-சங்குப்பிட்டி வீதி திறக்கப்பட்டு யாழ்ப்பாணத்திற்கான பழைய தரைவழிப்பாதை திறக்கப்படலாம்.**

**★ யுத்தத்தால் இடை நிறுத்தப்பட்டிருக்கும் சங்குப்பிட்டி-கேரதீவை இணைக்கும் தாம்போதி பாலம் முற்று முழுதாக கட்டிமுடிக்கப்பட்டு ஒரு புதியதரை வழிப் பாதையாக மன்னார்-யாழ்ப்பாணம், வவுனியா-யாழ்ப்பாணம் மார்க்கமாக போக்குவரத்தை தோற்றுவிக்கலாம்.**

**★ யாழ்-குடாநாட்டில் நிலை கொண்டிருக்கும் படையினருக்கு உளவியல் ரீதியாக ஒரு உறுதிப் பாட்டை இந்த பாதை திறப்பு கொடுக்கலாம்.**

**★ தமிழ் நாட்டுக்கான புலிகளின் கடற்போக்குவரத்து தடைப்படலாம்.**

**★ மேற்கு கடலின் மத்தியில் அமைந்திருக்கும் இரணைதீவு புலிகளின் கடற்போக்குவரத்து மையமாக இருப்பதால் அது படையினரால் கைப்பற்றப்பட்டு அவர்களின் செயல்பாடு நிறுத்தப்படலாம். (இத்தீவில் இருந்தே, பயணிகளை ஏற்றிவந்த லயன் ஏயார் விமானம் புலிகளால் சுட்டுவீழ்த்தப்பட்டதைக் குறிப்பிடலாம்.)**

**★ வன்னியிலிருந்து யாழ்-குடா நாட்டின் தென்பகுதி மீன்பிடிக் கிராமங்களான கொழும்புத்துறை -பாசையூர்-குருநகர் பகுதிகளுக்குள் ஊடுருவும் புலிகளை தடுத்து நிறுத்தலாம்.**

**(புலிகளின் 'பிஸ்டல்' குழுவும், சிறு தாக்குதல் குழுவும்-தற்கொலையாளிகளும் இதன் வழியாகவே யாழ் நகருக்குள் ஊடுருவதாக படையினரின் உளவு அறிக்கைகள் கூறுகின்றன.)**

**★ புலிகளின் இளம்வீரர்கள் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டு போர் புரியும் மூர்க்கத்தை இழந்து போகலாம்.**

**★ இதன் பின்னணியிலேயே தப்பி ஓடுதல்-சரண் அடைதல்-உள் குத்து வெட்டுகள்-கொலை-கொள்ளைகள் போன்ற சீரழிவுகள் புலிகள் மத்தியில் ஆரம்பமாகலாம்.**

மேற்காணும் பின் விழைவுகளை பதிலடிகள் மூலம் தான் தடுத்து நிறுத்த முடியும். அவர்கள் பணியும் அதுதான். வன்னியின் மேற்குக் கரை முற்றுமுழுதாக பறிபோகும் வரை புலிகள் சும்மா பார்த்துக்கொண்டிருப்பார்களா என்பது தான் அடுத்த கேள்வி. மேலே சொல்லப்பட்ட இராணுவ பின்னடைவுகளை புலிகளும் அறிந்திருப்பார்கள்.

படையினரை காட்டின் உள் பகுதிக்குள் வரவிட்டு ஊடறுத்து தாக்குவதற்கும் புலிகள் திட்டமிட்டும் இருக்கலாம். ஆகவே படையினர் நிதானமாகவே கால்பதிப்பார்கள்.

மாறாக, எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுவதுபோல் 6ம் திகதி நடக்க இருக்கும் ஐந்து மாகாண சபை தேர்தல் வெற்றிகளுக்காகவே 'இந்த 'ரணகோஷ' இராணுவ நடவடிக்கையை ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் திட்டமிட்டிருந்தால் தேர்தல் முடிந்ததும் நிறுத்தப்படலாம். இருப்பினும் இந்த 'ரணகோஷ' நடவடிக்கையால் பெற்றிருக்கும் வெற்றியையும் குறிப்பிட்டு சொல்லவேண்டும்.

அரசின் தேர்தல் கோஷத்திற்காக-யுத்த கோஷம் செய்யப் போய்-அது படையினருக்கு வெற்றிக்கோஷமாக திரும்பியிருப்பது அரசுக்கும் குதூகலம்தான்.

**என்.ஆர். சோமு**




# சேதுகால்வாய் திட்டம் அமுல் இந்திய-இலங்கை உறவை பாதிக்குமா?

★ சமீபகாலமாக சேதுகால்வாய்திட்டம் பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் பரவலாக அலசப்பட்டு-பல கருத்துக்கள் கட்டுரை ஆய்வாளர்களால் முன்வைக்கப்பட்டுள்ளன.

★ இத்திட்டத்தின் தாக்கம் எந்த அளவுக்கு இலங்கையின் பொருளாதாரத்தை நிர்மூலமாக்கும் என்பதையும் சுட்டிக்காட்டி அரசாங்கத்தை எச்சரித்துமிருக்கிறார்கள்.

★ தொடரும் யுத்தத்தால் அழிந்துகொண்டிருக்கும் இலங்கையின் பொருளாதாரம்-இத்திட்டம் முடிவுற்று செயற்படத்தொடங்கினால் எந்த அளவுக்கு மேலும் சீரழிந்து போகும் என்றும் ஆள்வோருக்கு இடித்துரைத்திருக்கிறார்கள்.

இவைகள் பழைய செய்திகளாக இருந்தாலும் பலமான கருத்துக்களை பிரதிபலித்து நிற்கின்றன. மாற்று வழி தெரியாமல் கையை பிசைந்து நிற்கும் அரசாங்கம் இந்த எச்சரிக்கைகளை எவ்வளவு 'சீரியசாக' எடுத்திருக்கிறது என்பதுதான் தெரியவில்லை. அல்லது எடுக்க முடியாத நிலையல் தத்தளித்து தடுமாறுகின்றதா என்பதும் புரியவில்லை.

**பல விட்டுக்கொடுப்புகளுக்கு பின் தன்னை சுற்றியிருக்கும் நாடுகளை நேச நாடுகளாக வைத்திருப்பதைவிட-இந்தியாவின் பாதுகாப்புக்கு இந்தியாவிற்குள் செய்யப்பட வேண்டிய வேலைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதே சிறந்தது என்று இந்திய அரசு கருதுவதும் நியாயமானது.**

இன்றைய இந்தியாவின் தேவைகள் மிகப்பிரமாண்டமானவை. அதை இலங்கை அரசால் பெற்றுக்கொடுக்கவோ பூர்த்தி செய்யவோ முடியாது. இந்தியாவின் பாதுகாப்பு தேவைகளுக்குள் இந்த சேதுகால்வாய்திட்டம் அடங்குவதால் அது பற்றி மாற்று மதிப்பீடுதான் இந்த ஆய்வுக்கட்டுரை.

பாக்கு நீரிணை - (PALK STRAIT) இந்து சமுத்திரத்தின் ஆழம் குறைந்த கடல்பரப்பு - இந்திய-இலங்கை நாடுகளைப்பிரிக்கும் குறுந்தூரத் தொடுகடல் என்று பலவாறு அழைக்கப்படும் இக்கடல் பிரதேசத்தில் மீண்டும் சேதுகால்வாய்த் திட்டம் நிறைவேற்றப்பட இருப்பதாக இந்திய அரசால் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

காலத்திற்கு காலம் இந்திய அரசுகளால் நிறைவேற்றப்படப் போவதாக அறிவிக்கப்பட்டு கிடப்பில் போடப்பட்ட இத்திட்டத்திற்கு ஒரு நீண்ட கால வரலாறும் உண்டு. குறிப்பாக முன்னைய இலங்கை அரசுகளின் வேண்டுகோளுக்கு இணங்க இத்திட்டம் பலமுறை கைவிடப்பட்டிருந்தது என்றே சொல்லலாம்.

இலங்கையின் பொருளாதாரத்தின் வளர்ச்சியும்-வீழ்ச்சியும் ஒன்றுக்கொன்று பின்னிப்பிணைந்திருந்ததால் இதுவரை காலமும் இந்திய அரசுகள் இதுவிடயத்தில் இலங்கைக்கு சாதகமான முடிவுகளையே எடுத்திருந்தன.

அத்துடன் இந்திய பாதுகாப்புக்கு இலங்கையை ஒரு நேச நாடாக தொடர்ந்து வைத்திருக்க வேண்டும் என்ற தூரநோக்கும் இந்த விட்டுக்கொடுப்புக்கு காரணமாயிருந்தன.

ஆனால் இன்று நிலைமைகள் அப்படியல்ல. இலங்கை-இந்தியாவின் நேசநாடென்று சொல்லுமளவுக்கு உறவுகள் சீராக இருக்கிறது என்றும் சொல்லமுடியாது. உதட்டளவில் உறவுகளை சுமூகமாக வைத்திருப்பதிலேயே இரு நாட்டு இராஜதந்திரிகளும் முயற்சிகிறார்கள்.

இனப்பிரச்சினையில் இந்தியா தலையிட்டதன் தாக்கம் இன்றுவரை இரு நாடுகளுக்குமிடையில் ஒரு இராஜதந்திர நிழல் யுத்தம் தொடந்துகொண்டே இருக்கின்றது.

இந்தியாவை இப்பிரச்சினையிலிருந்து தள்ளி வைக்க வேண்டும் என்ற இலங்கை அரசின் நிலைப்பாடு வெற்றியளித்திருக்கும் இந்த நேரத்தில் சேதுகால்வாய்த் திட்டம் முளைத்திருக்கிறது. முன்னைய அரசுகள் கேட்டுக் கொண்டதுபோல் இத்திட்டத்தை நிறுத்திவைக்கும்படி (இன்றைய இலங்கை அரசு)-இந்தியா அரசிடம் கேட்டுக்கொண்டு கடமைப் பாட்டுக்குள் மாட்டிக் கொள்ளுமா என்பதை பொறுதிருந்துதான் பார்க்க வேண்டும். ஏனென்றால் விட்டுக்கொடுப்புகள் இருபக்கமும் இருக்க வேண்டும் என்பதுதான்பொதுவிதி.

இந்தியாவின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு சேதுகால் வாய்த்திட்டம் நிறைவேற்றப்பட இருப்பதாக இந்திய அரசு அறிவித்திருப்பதை கவனத்தில் கொள்ளாமல் இருக்க முடியாது.

இந்தியாவின் தென்பகுதியில் இந்திய கடற்படையின் விரிவாக்கமும் இதில் அடங்கியிருப்பதால் மேலும் முக்கியத்துவம் பெறுகின்றது. ஆகவே கடந்த காலத்தைப் போல் இத்திட்டத்தை நிறுத்தி வைப்பதற்கு எந்தவித முகாந்திரமும் இந்தியாவுக்கு இல்லை.

பல விட்டுக்கொடுப்புகளுக்குப் பின் தன்னை சுற்றியிருக்கும் நாடுகளை நேச நாடுகளாக வைத்திருப்பதை விட-இந்தியாவின் பாதுகாப்புக்கு இந்தியாவிற்குள் செய்யப்பட வேண்டிய வேலைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதே சிறந்தது என்று இந்திய அரசு கருதுவதும் நியாயமானது.

ஆகவே இலங்கை அரசு ஒரு நேசநாடக இருக்க வேண்டும் என்பதற்காக இந்தியாவின் ஒட்டுமொத்தமான பாதுகாப்புக்கு சமரசம் பேசவேண்டும் என்ற அவசியமில்லை. முன்னைய இந்திய அரசுகளின் கொள்கையை இன்றய அரசு கடைப்பிடிக்க வேண்டும் என்ற தேவையும் இதனால் அடிபட்டுபோகின்றது.

இதில் இன்னொரு விடயத்தை கவனத்தில் எடுக்க வேண்டும். கடும் போக்காளரும்-விடுதலைப் புலிகளின் ஆதரவாளரும்-இந்திய பாதுகாப்பு மந்திரியுமான ஜோர்ஜ் பெர்ணாண்டஸ் இத்திட்டத்தின் தற்போதய மூலகர்த்தாவாக இருப்பதால் இலங்கை அரச விடயத்தில் விட்டுக்கொடுப்பதற்கு ஒன்றுமில்லை என்ற கடும் போக்கையே அவர் எடுக்கக்கூடும்.

மேலும், இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக விளங்கும் நாடுகளான அமெரிக்கா-பாகிஸ்தான்-சீனா தங்களுக்குள் பல கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் இந்தியாவை எதிர்ப்பதில் ஒருமித்த கருத்துடனேயே செயற்படுகின்றன. இராணுவ தேவைகளுக்காக ஒன்றுக்கொன்று உதவிவருகின்றன. குறிப்பாக அமெரிக்கா தனது கடல் வல்லாதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக இந்த நாடுகளை பயன்படுத்துகின்றன.

பசுபிக்-அட்லாண்டிக் சமுத்திரங்களில் தனது ஆளுமையை செலுத்தி சிறிய நாடுகளுடன் யுத்தம் புரியும் அமெரிக்கா-இந்து சமுத்திரத்தையும் தனத ஆளுமைக்குள் கொண்டு வருவதற்கான முயற்சிகளில் இறங்கியிருக்கும் இந்த வேளையில்-சேதுகால் வாய் திட்டத்தை இந்திய அரசு அறிவித்திருப்பது ஒரு மாற்று இராணுவ மதிப்பீடாகும்.

இந்தத் திட்டத்தில் புதையுண்டிருக்கும் ரகசியங்கள் அது நிறைவேறி முடியும் வரை வெளியே தெரியாமல் இருந்தாலும் அமெரிக்கா அரசுக்கு அதன் விளைவுகள் புரியும். ஏனென்றால் இந்திய கடற்படையின் மேற்பார்வையில் இத்திட்டம் நிறைவேற்றப்படுவதால் அதன் பிரமாண்டம் இப்பிராந்தியத்தில் அமெரிக்காவின் தலையீட்டையே கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்கான சந்தர்ப்பத்தை இந்தியாவுக்கு ஏற்படுத்திக் கொடுக்கும். இந்த ஆபத்தான வளர்ச்சிப் போக்கை அமெரிக்க அரசு ஒரு போதும் விரும்பாது.

ஆகவே அமெரிக்காவின் நலன்களுடன் ஒப்பிடும் போது இந்த சேதுகால்வாய்த்திட்டம் அதன் கடல்வல்லாதிக்கத்திற்கு விடப்பட்ட ஒரு எச்சரிக்கை மணியாகும்.

**அலெக்சாண்டர்**

அமெரிக்காவின் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் இந்தியாவின் பாதுகாப்பு இதில் முக்கியத்துவம் பெறுகின்றது. ஆகவே இந்திய கடற்படையின் விரிவாக்கத்திற்கும்-இந்து சமுத்திர பிராந்தியத்தில் தனது கடல் ஆளுமையை உறுதிப்படுத்துவதற்கும்-இந்தியப் போர்க்கப்பல்களின் கடற் பிரயாணத்திற்கும்-இந்தியாவின் கிழக்கு-மேற்கு கடற்படைத்தளங்களை இணைப்பதற்கும் இத்திட்டம் அவசியமாகின்றது.

**இலங்கை-இந்தியாவின் நேசநாடென்று சொல்லுமளவுக்கு உறவுகள் சீராக இருக்கிறது என்றும் சொல்லமுடியாது. உதட்டளவில் உறவுகளைச் சுமூகமாக வைத்திருப்பதிலேயே இரு நாட்டு இராஜதந்திரிகளும் முயற்சிக்கிறார்கள். இனப்பிரச்சினையில் இந்தியா தலையிட்டதன் தாக்கம் இன்றுவரை இரு நாடுகளுக்குமிடையில் ஒரு இராஜதந்திர நிழல் யுத்தம் தொடந்துகொண்டே இருக்கின்றது.**

இந்திய அரசின் 1999-2000 ஆண்டுகளுக்கான வரவு-செலவு திட்டத்தில் சேதுகால்வாய் திட்டப் பணிகளின் ஆரம்ப செலவுகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இருப்பினும் இந்த திட்டத்திற்கான ஆரம்ப பண ஒதுக்கீடு போதுமானதாக இல்லை என்று தமிழ் நாடு முதல் அமைச்சர் கலைஞர் கருணாநிதி மத்திய அரசாங்கத்தைக் குற்றம் சாட்டியிருக்கிறார். விரைவில் இத்திட்டத்தை நிறைவேற்றி முடிக்கும்படி கேட்டுக் கொண்டிருக்கிறார்.

அத்துடன் இத்திட்டத்தில் தமிழ் மக்களின் நலன்களும் அடங்கியிருப்பதால் தமிழ்நாட்டுப் பாராளுமன்ற அங்கத்தவர்களின் ஒட்டுமொத்தமான ஆதரவும்-அக்கறையும் இதில் அடங்கியிருக்கிறது.

குறிப்பாக இந்திய பாராளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சியாகவும்-பாரதிய ஜனதாஅரசின் பங்காளியாகவும்-அந்த அரசின் ஆயுளை நிர்ணயிக்கும் சக்தியாகவும் ஜெயலலிதாவின் அண்ணா தி.மு.க இருப்பதால் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தத் தவறாது என்றே அவதானிகள் கருதுகிறார்கள்.

ஐரோப்பிய நாட்டு துறைமுகங்களில் இருந்து சுயேஸ் கால்வாய் வழியாக அரபிக்கடலில் நுளையும் கப்பல்கள்-இந்து சமுத்திரத்தை கடந்து தென்கிழக்காசிய நாட்டுத் துறைமுகங்களுக்கு செல்லும் ஒரு குறுகிய கடல் போக்குவரத்து வழியாகவும்-உலக வர்த்தகத்திற்கு ஒரு பாலமாகவும் இந்த சேதுகால்வாய் திட்டம் சிறப்புப் பெறுகின்றது.

உலகின் பிரசித்தி பெற்ற பனாமா-சுயேஸ் கால்வாய்களுக்கு அடுத்து மூன்றாவது குறுந்தூர கப்பல் போக்கு வரத்து கடல்வழியாக சேதுகால்வாய் அமைவதால் உலக நாடுகளே இத்திட்டத்தை வரவேற்கும்.

ஆதலால் இத்திட்டம் யாருடைய வேண்டுதலாலும் வற்புறுத்தலாலும்-மிரட்டலாலும் நிற்காது என்பதே உறுதியாகிறது. ●

## திருப்பங்களை.........

1ம் பக்கம் தொடர்ச்சி

செய்யும் முறையில் திருத்தப்பட்டு அமுல்படுத்தப்படுவதின் மூலமே பொதுஜன முன்னணி அரசு தன்னை தக்க வைத்துக் கொள்ளலாம்.

எது எப்படியிருப்பினும் நடந்து முடிந்த ஐந்து மாகாணசபை தேர்தல்களின் முடிவுகளை ஆராய்ந்து பார்க்கும் போது சில உண்மைகள் வெளியாகியிருக்கிறது. இதில் பொ.ஜ.முன்னணி 21,05, 546 வாக்குகளும், ஐ.தே.கட்சிக்கு 19,79, 546 வாக்குகளும் பெற்றிருக்கின்றன. மற்றக் கட்சிகள் எல்லாம் இணைந்து 5,66,912 வாக்குகள் பெற்றிருப்பினும் ஜே.வி.பி 2,48, 799 வாக்குகளும், இந்திய வம்சாவளி பேரணி 1,45,350 வாக்குகளும், பெற்றிருப்பதை குறிப்பிட்டு சொல்லாம்.

எதிர்காலத்தில் நடை பெறப் போகும் ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி தனியாக நின்று தனது தனித்துவத்தை கடைப்பிடிக்க முற்பட்டாலும் பொதுஜன முன்னணிக்கும்-ஐ.தே. கட்சிக்கும் இடையிலேயே கடும் போட்டி நிலவுவதற்கு வாய்ப்பிருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில் வட -கிழக்கின் தமிழ் மக்களுடைய வாக்குகளும்-மலையகத் தமிழ்மக்களின் வாக்குகளுமே இரு பிரதான கட்சிகளின் வெற்றி-தோல்வியை நிர்ணயிக்கும் என்பதை இத்தேர்தல் முடிவுகள் தெளிவாகக்காட்டி நிற்கின்றன.

எனவே எதிர்காலத்தில் தமிழ் மக்களின் உரிமைவென் றெடுக்கப்பட வேண்டுமாயின் தமிழ்க்கட்சிகளிடையில் ஐக்கியமும் அரசியல் இணக்கப்பாடும் அவசியம் என்பதையே நடந்து முடிந்த மாகாணசபைத் தேர்தல்கள் வலியுறுத்தி நிற்கின்றன். ●

# நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட........

இலங்கையின் அரசியல் வானில் இப்போது யுத்த மூட்டங்களைத் தேர்தல் மேகங்கள் மறைத்து நிற்கின்றன.

**நடந்து முடிந்த வடமேல் மாகாண சபைத் தேர்தல்.**

**இப்போது ஐந்து மாகாணசபைகளுக்கான தேர்தல்.**

**அடுத்து எதிர்பார்க்கக்கூடிய ஜனாதிபதித் தேர்தல்.**

**அதற்கு அடுத்தான பாராளுமன்ற பொதுத் தேர்தல்.**

ஆக இந்த வருடத்தை இலங்கையின் குறிப்பாக தென்னிலங்கையின் தேர்தல் வருடம் என்று குறிப்பிடலாம்.

தென்னிலங்கையில் மாகாணசபைகள் அர்த்தமற்ற ரீதியில் தான் இயங்குகின்றன. இங்கு தேர்தல்கள் மாகாணசபைகளுக்கு உரிய அதிகாரங்களை அளித்து; முறைப்படி இயங்கவைப்பதற்கான நோக்கங்களைக் கொண்டவையல்ல.

மாறாக, அடுத்து வரும் ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் என்பனவற்றில் அதிகாரக் கதிரைகளை யார் பிடிப்பது என்பதற்கான முன்னோட்டத் தேர்தல்களே இந்த மாகாணசபைத் தேர்தல்கள்.

மாகாணசபைகள் நாட்டின் அரசாளும் விவகாரங்களை நடாத்துவதற்கான கவனிப்பதற்கான தேவைகளாகக் கருதப்படாமல், அவற்றுக்கான தேர்தல்கள் கூட பாராளுமன்றத்தின் விவகாரங்களுக்கும் தேவைகளுக்கும் கீழ்ப்படிந்த ஒரு விடயமாகவே ஆக்கப்பட்டுள்ளன.

எனினும் சிங்கள மக்கள், இந்த மாகாணசபைகள் உருவாக்கப்படுவதற்கு முன்னர் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தங்கள் அரசியல் தலைமையைத் தெரிவு செய்து வந்தார்கள். இப்போது, சராசரியாக மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை அந்த வாய்ப்பைப் பெற்று வருகின்றார்கள்.

**ஆனால் இலங்கை வாழ் தமிழ் மக்களின் நிலை என்ன?**

**குறிப்பாக வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிலை என்ன?**

1970களின் ஆரம்பத்தில் தேர்தல்கள் வேண்டாம் சுதந்திரமே வேண்டும்; விடுதலையே வேண்டும்; புரட்சியே வேண்டும் என்றோம்.

வாக்குகளால் பலனில்லை; ஆயுதங்களே தமிழர்களுக்கு விடிவைத் தேடித்தரும் என்றோம்.

அரசியற் தலைவர்கள் தேவையில்லை; விடுதலைப் போராளிகளே வேண்டும் என்றோம்.

இந்த முப்பது ஆண்டுகள் முடியும் தறுவாயில் இன்று தமிழ் மக்களின் அரசியற் தலைவிதி என்ன?

அரசியற் தலைமைத்துவம் இல்லை என்பதுதான் நிலைமை.

பெருமைகளோடு வாழ்ந்த தமிழ்ச் சமுதாயம் இன்று அடங்கி ஒடுங்கி கூனிக் குறுகி பயந்து நடுங்கி வாழ்கிறது.

எங்கு பிழை? எதிற் பிழை? எப்படி வந்தது இந்தப் பிழைகள்? இந்தப் பிழைகளை எப்படி நீக்குவது என்று எதுவும் தெரியாமல் குழம்பி இருக்கிறது.

சங்கடமான விவகாரங்கள் எதையும் எவரோடும் பேசாமல் இருப்பதுதான் தலை தப்புவதற்கு வழி எனத் தமிழ் இனம் வாழாதிருக்கின்றது.

தமிழ்மக்களின் இந்த அபாக்கியமான நிலையைப் பயன்படுத்தி சொந்தபாக்கியங்களைத் திரட்டிக்கொள்பவர்கள் பலபேர்.

இவர்கள் சமூகசேவைத் தொண்டர்கள், எழுத்தாளர்கள், எதிலும் சம்பந்தப்படாத அரசாங்க அதிகாரிகள், கஷ்டமான சூழலுக்கூடாக வியாபாரம் செய்பவர்கள், பிரஜைகள் தலைவர்கள் மனித உரிமைக்காரர்கள் என வெவ்வேறு போர்வையில் மக்கள் மத்தியில் நடமாடும் இவ்வாறான பலபேர் யுத்தத்தினால் தமது சொத்துக்களைக் பெருக்கிக் கொள்வதில் சொத்தைபோகாமல் செயற்படுகிறார்கள்.

வெளிநாடுகளில் இருக்கும் கணிசமான பகுதியினருக்கும் இந்த யுத்தம் தேவைப்படுகிறது.



இந்த வகையினரைப் பொறுத்தவரையில் இவர்களுக்கு என மிகத் தெளிவான கொள்கைகள் உண்டு.

(1)புலிகளும் வெல்லக் கூடாது அரசுப்படைகளும் வெல்லக் கூடாது யுத்தம் இப்படியே தொடர்ந்து நீடிக்க வேண்டும்; மக்கள் இப்படியே துன்பத்தில் உழலவேண்டும்.

(2)அரசுப்படைகள், புலிகள் ஆகிய இருபகுதியினரையும் ஒதுக்கி விட்டே ஒரு அரசியற் தலைமை தமிழர்களுக்கு வந்துவிடக்கூடாது; உருவாகிவிடக்கூடாது.

ஆனால் அதே வேளை இந்த வகையினர் தமிழ் மக்கள் மீது தாங்கள் தான் மிகுந்த அக்கறை கொண்டவர்கள் போல நடிக்கின்றார்கள். தமிழ் மக்கள் அகதிகளாக; கையேந்தி நிற்பவர்களாக இருந்தால்தான் இந்தக் கூட்டத்துக்கு வாழ்வு.

ஐயகோ! தமிழர்கள் அந்தரிந்து நிற்கிறார்களே! என்கிறார்கள். ஆனால் தம் உள்ளத்தில் தமிழ் மக்கள் அந்தரித்த வாழ்க்கை வாழ்வதைத்தான் விரும்புகிறார்கள்.

புலிகளை நேரடியாகவோ மறைமுகமாகவோ பாராட்டும்-பாதுகாக்கும் சில எழுத்தாளர்கள் சில பேச்சாளர்கள் சில பேராசிரியர்கள் பா.உ க்கள், கணனி நெடும் பாதையில் தமிழ்ப் பின்னலைத் தொழில் செய்வோர் ஆகிய இந்தப் புத்தி ஜீவிகள் இவர்கள் உண்மையில் சுத்துமாத்து ஜீவிகள்-புத்தியை வைத்து பிழைப்பு நடத்தும் இவர்கள் புலிகளைப் பாராட்டுவார்கள். ஆனால் புலிகளைத் தமது தலைமையாக ஏற்றுக்கொண்டதில்லை.

புலிகளை ஆதரிப்பதன் மூலம் தமக்கு நல்ல பிழைப்பைத் தேடிக் கொள்ளும்-பிழைப்புவாதிகளே இவர்கள். மாறாக, இந்த சுத்துமாத்து 'பெரிய மனித' ஜீவிகள், பிரபாகரனையும் புலி உறுப்பினர்களையும் தமது தேவைகளுக்கான சூழலை ஏற்படுத்தித்தரும் அடிதடியாட்கள், ஆயுதம் தாங்கிய குண்டர்கள் என்றே கருதுகிறார்கள்.

இந்த 'அடிதடியாட்கள்-குண்டர்கள்' காலப் போக்கில் அழிந்துவிடுவார்கள் அல்லது மக்கள் மத்தியல் காணாமற்போய்விடுவார்கள் என்றே இந்த அதிபுத்திஜீவிகள் கருதுகிறார்கள். அதற்கிடையில் சேர்த்துக்கொள்ளக் கூடிய பாக்கியங்களைச் சேர்ந்துக்கொள்வது நீண்ட காலம்போக்கில் சூழல் மாற்றம் காரணமாக புலிகள் அழிந்து-அழிக்கப்பட்டு சுமுகமான அரசியற் சூழல் ஏற்படுமானால் அதிலும் தாங்களே -மக்களுக்குத் தொல்லைதராத சமூக அக்கறையாளர்கள்' என்ற போர்வையில் அரசியற் சுகங்களை மக்களிடம் ஏமாற்றிக் பெற்றுக் கொள்வது.

சிங்கள இனவெறியர்கள் கூட சிறிலங்கா அரசும் பிரபாகரனும் பேச்சு வார்த்தை நடாத்த வேண்டும் என்கின்றனர் பிரபாகரனுடன் பேசித்தீர்க்க வேண்டும் என்கின்றனர் எனெனில் அந்த இனவெறியர்களுக்கு நன்கு தெரியும்.

பிரபாகரனுடன் உண்மையான பேச்சுவார்த்தை நடைபெறமாட்டாது என்று.

புலிகள் யுத்தம், பிரிவினை ஆகிய இரண்டையும் முடிவுக்குக் கொண்டுவரும் எந்த இணக்கத்துக்கும் வரமாட்டார்கள் என்பதும் அவர்கள் அறிவர்.

இந்த நிலையில் 'புலிகள் தயாராக இல்லை' 'புலிகள் கோரிக்கை நியாயமான-தல்ல' என்று சொல்லிக் கொண்டே தமிழர்களை அழிக்கும் திட்டத்தை சிங்கள இனவெறிச்சக்திகள் நடைமுறைப் படுத்திக்கொண்டிருக்கின்றன.

சரியோ, பிழையோ உலகின் கண்முன்னால் இன்று பேரம் பேசும் ஆற்றல் புலிகளிடம் உண்டு. தமிழர்களுக்கு அதிக அளவிலான உரிமைகளை-அதிகாரங்களை பேச்சு வார்த்தை மூலம் பெறக் கூடிய வாய்ப்புக்கள் புலிகளிடம் உண்டு.

புலிகள் யுத்தத்தையும் பிரிவினையையும் கைவிடத்தயாரான ஒரு மாற்று அரசியற் தீர்வுத்திட்டத்தை அது எந்தளவு அதிகபட்சமான அதிகாரத்தைக் கொண்டதாயினும் முன்வைக்கத் தயாராக இருக்குமானால்; அவ்வாறு தயாராக இருப்பது உண்மையானது என உலக நாடுகள் நம்புமானால் இன்று எத்தனையோ நாடுகள்-இந்தியா உட்பட-தமிழ் மக்களுக்குப் பின்பலமாக அமையத்தாயாராகவே உள்ளன.

ஆனால் புலிகள் அவ்வாறான ஒரு மாற்று அரசியல் தீர்வுத்திட்டத்தை முன்வைக்காத பட்சத்தில்-புலிகள் சமாதானத்துக்குத் தயார் என்று கூறுவதெல்லாம் வெறுமனே யுத்த தயாரிப்பின் ஒரு பாகமாக இருப்பதையும் உலக நாடுகள் நன்கு அறிந்தேயுள்ளன. இதனால் யாரும் எந்த நாடும் இலங்கையின் இனப்பிரச்சினையில் கைவைத்து தமது கையைச் சுட்டுக்கொள்ளத்தயாராக இல்லை.

இதை சிங்கள இனவெறியர்களும் தமிழ் மக்கள் மத்தியிலுள்ள அரசியற் சுயநலப்பேர்வழிகளும் நன்குஅறிவர்.

இந்தச் கூட்டத்தினர் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் ஒரே மாதிரியானவர்களே-தமிழ் மக்களின் நலன்களுக்கு எதிரானவர்கள்.

இவர்களை பொறுத்தவரையில் தமிழ்ப்பிரதேசங்களை ஒரு புறம் சிறிலங்கா இராணுவம் ஆளவேண்டும். மறுபக்கம் இராணுவத்தால் முழுமையாகக்கட்டுப்படுத்த முடியாத வகையில் புலிகளும் தமது கொலைப்படலங்களைத் தொடரவேண்டும். இதற்கு இடையில் தமிழ் மக்கள் வேறு மாற்று வழியில்லாமல் அரசியற் தலைமையில்லாமல் எல்லா வகைகளிலும் துன்பப்பட்டுக்கொண்டேயிருக்க வேண்டும்.

இதுதான் இந்த சொந்த இளச் சுரண்டல் வாதிகளினதும் சிங்கள இனவெறியர்களினதும் ஒரே நோக்கம்.

தமிழ் மக்களின் அரசியல் சிக்கல்களை பிரித்து இனம் கண்டு புரிந்து கொள்வது என்பது தமிழர்களுக்கே மிகவும் கடினமான ஒன்றாகும்.

ஆர்.நரசிம்மன்

ஆனால் தமிழர்களின் எதிர்பார்ப்போ

★ தமிழர்களைச் சிங்களவர்கள் புரிந்துகொண்டு தீர்வுதரவேண்டும்.

★ தமிழ் மக்களின் நிலையை இந்தியா புரிந்து கொண்டு உதவ வேண்டும்.

★ தமிழ் மக்களின் பிரச்சினைகளை உலகம் அனுதாபம் காட்டி தீர்வு ஏற்படுத்த வேண்டும்.

**தமிழ்மக்களுக்கு உள்ளே இருக்கும் சிக்கல்களை தமிழர்களே தீர்க்க வேண்டும்.**

**தமிழ் மக்களின் பிரதிநிதிகள் -தலைவர்கள் யார் என்பதை தமிழ் மக்கள் காலத்துக்காலம் தெரிவு செய்வது அவசியமாகும்.**

**தலைமை இல்லாத சமூகம் மேய்ப்பனில்லாத ஆட்டுமந்தையாம்.**

**தமிழ் மக்களின் அரசியற் கோரிக்கைகள் எப்படிப்பட்டதொரு தீர்வை குறைந்தபட்சம் தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள் என்பதனை தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தான் உரத்துக் முழங்கவேண்டும்.**

**அரசியற் தீர்வை சிங்களத் தலைவர்கள் தான் முன்வைக்க வேண்டும். விமர்சிப்பது மட்டும் தான் தமிழ்த் தலைவர்கள் கடமை என இருப்பது சரியான அணுகுமுறையாகாது.**

**மக்கள் மயப்பட்ட தலைவர்கள் உருவாக வேண்டும்-மக்களின் சரியான அபிப்பிராயங்களைப் பிரதிநித்தவப்படுத்தும்-மக்களுக்கு வழிகாட்டி நடத்திச் செல்லும் தலைவர்களே மக்களுக்கு வேண்டும்.**

**தனிமரம் தோப்பாகாது-உதிரியான தனிமனிதர்கள் நிறுவனமாகமாட்டார்கள்.**

**அறிவார்ந்த, ஆற்றல் மிக்க, அரசியல் சமூக அக்கறை கொண்டோர் இணைந்து செயற்படுவதற்கான ஒரே மூல வழி ஜனநாயகம் என்பதை அடிப்படையாகக் கொண்ட ஸ்தாபன வடிவம் தான்.**

**ஒவ்வொருவரும் தாங்கள் தான் சரியானவர்கள்-தாங்கள் மட்டும் தான் தவறுகளே இல்லாதவர்கள் என்று கருதினால் பலதரப்பட்டவர்களை-பலதரப்பட்ட ஆற்றல் உள்ளவர்களைத் அறிவுமிக்கவர்களை, சமூக அக்கறை கொண்டவர்களை-இணைக்கும்-இணைந்து செயற்படும் வாய்ப்பு ஏற்படாமலே போகும்.**

**தமிழ்ச் சமூகத்தின் திறமைகள் உதிரிகளாச் சிதறுண்டு போய்க் கிடக்கின்றன. இதனால் தான் இங்கு இலுப்பைப்பூக்கள் சக்கரையின் இடத்தைபிடித்துகொண்டுள்ளன.**

**தமிழ்ச்சமூகத்தின் நிலைமை-தலைமையில்லாத இந்த நிலைமை-தொடருமானால் விடிவே ஏற்படாது போகும். சீரழிவுகளே தொடரும்.**

**இதை மாற்றியே ஆக வேண்டும்-மாற்றியே தீருவோம் என நினைப் போர் மாற்றத்துக்கான வழிகளைத் தேடவேண்டும்-வழிகளைத் திறக்க வேண்டும். ●**

# மண்டியிடு மன்னிப்புக் கோராமல் தப்பியோடு....

## இலை மறைகாய்

"எனது வாழ்க்கையின் மறக்க முடியாத காலப்பகுதி 1986ன் இறுதிநாட்கள். ஒவ்வொரு நாட்களும் ஒவ்வொரு யுகங்களாக நீண்டது போலிருந்தது. ஒவ்வொரு நாளும் விடியும் போது நேற்று வரை உயிர் வாழ்ந்துவிட்ட மகிழ்ச்சி ஒரு புறமும், இன்றைய நாள் எப்படிக் கழியப் போகிறதோ என்ற ஏக்கம் மறு புறமுமாக இருக்கும். வவுனியா புகையிரத நிலையத்தில் வந்து கொழும்புக்கான பயணத்தை ஆரம்பித்த போது தாயக மண்ணிலிருந்து தூக்கியெறியப்பட்ட சோகம் நெஞ்சில் முட்டியது."

இவ்வாறான ஒரு அனுபவம் எனக்கு மட்டும் வாய்த்தது அல்ல. எனினும் எனக்கு ஏன் இது நேர்ந்தது என்பதை இந்தக் காலத்திலாவது எமது மக்களுக்கு சொல்லி வைக்க வேண்டும்.

மாவட்ட மட்ட, இன அடிப்படையிலான தரப்படுத்தல்களைக் கடந்து பல்கலைக்கழகத்தில் கல்வி பயில அனுமதி கிடைத்த போது எனது பெற்றோர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சென்றடைந்த களைப்புத் தீருவதற்கிடையே 1983ன் இனக்கலவரம் வெடித்தது. யாழ்ப்பாணத்திற்குப் பாதுகாப்பாகப் போய்ச்சேர்ந்தாலே போதும் என்ற நிலையில் பலத்த பிரயத்தனத்திற்கும் மத்தியில் தாயக மண்ணைச் சென்றடைந்தேன்.

அமளிகள் ஓய்ந்த பின்னர் மீண்டும் பேராதனைக்குச் செல்ல மனம் இடந்தரவில்லை. அப்போது பேராதனைக்கு தெரிவான மாணவர்கள் பலரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு மாற்றம் கோரிய போது நானும் அவர்களுடன் இணைந்து கொண்டேன். மகஜர்கள் மூலம் கோரிக்கைககள் விடுத்து சத்தியாக்கிரகம் உண்ணாவிரதம் எனப் போர்க்கொடி தூக்கி எங்கள் இடமாற்றக் கோரிக்கைக்கான குரல் ஓங்கி ஒலித்தது. உண்ணாவிரதம் இருந்த மாணவர்கள் விடுதலைப்புலிகளால் தூக்கிச் செல்லப்பட்ட நிகழ்ச்சி மனத்தில் காயம் ஏற்படுத்தியது.

இதேவேளை எங்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பயிலும் வாய்ப்பும் கிட்டியது. இந்த வேளையில் தான் ஈழ மாணவர் பொது மன்னறத்தினரின் அறிமுகமும், தொடர்பும் ஏற்பட்டது. புத்தகப் பூச்சியாக படிப்பு ஒன்றையே எண்ணத்தில் கொண்டிருந்த எனது பார்வை அகல விரிந்தது.

ஒடுக்கப்பட்ட-ஏழை மக்களின் குரல் என் செவிப்பறைகளையும் வந்து முட்டியது. இன ஒடுக்குமுறையின் கோர அனுபவம் நரம்புகளுக்குள் முறுக்கேற்றியது. ஒடுக்குமுறைகள் அற்ற-அடக்குமுறைகள் அகன்ற சமத்துவ-சமூக அமைப்பு ஒன்றைக்கட்டியெழுப்ப வேண்டும் என்ற கனவு வளர்ந்தது.

வரலாறு என்பது படிக்கப்படுவதற்கு மட்டுமல்ல படைக்கப்படவும் கூடியது என்ற நம்பிக்கை துளிர் விட்டது. இனத்தின்-சமூகத்தின் விடுதலைக்காக போராடும் வாய்ப்பு எல்லாத் தலைமுறைகளுக்கும் வாய்த்து விடுவதில்லை.

ஆனால் எமது இனத்தின் விடுதலைக்காகப் போராடும் வாய்ப்பை காலம் எமது தோள்களிலும் சுமத்தியிருக்கிறது என உணர்ந்து கொண்ட போது கல்வி இரண்டாம் பட்சமாகியது. பல்கலைக்கழகம் செல்வது அரசியல் தொடர்புகளை வலுப்படுத்திக்கொள்வதற்கே என்றாகியது. ஊர் ஊராகச் சுற்றித் திரிந்தோம்.

சமூக-பொருளாதார அரசியல் விடுதலையின் அவசியத்தை எடுத்துரைத்து, சுயநலம் மறந்து பரந்துபட்ட மக்களின் நலன்களுக்காக ஒவ்வொருவரும் சிந்திக்கவும், செயற்படவும் முன்வரவேண்டுமென வேண்டுகோள் விடுத்தோம்.

தலைவர்கள் எனப்படுபவர்களின் சாதுரியத்தால்-விவேகத்தால்-வீரத்தால் மட்டும் சமூக மாற்றம் வந்து விடப் போவதில்லை. பதிலுக்கு மக்கள் மத்தியில் ஒரு மாற்றம் வரவேண்டும், அதற்காக ஒவ்வொருவரும் பாடுபட வேண்டும் என்று முரசறைந்தோம்.

வங்கிக் கொள்ளைகள், பொலீசார் மீதான தாக்குதல் போன்ற கவர்ச்சிகரமான செயற்பாடுகள், மக்களை வெறுமனே பார்வையாளர்களாக வைத்திருந்துவிடும் என்ற அச்சத்தை வெளியிட்டோம். ஆயிரம் சொற் பொழிவுகளை விட ஒரு கெரில்லாத் தாக்குதல் மிகுந்த பயனைத் தரும் என்று சொல்லப்பட்ட போது மக்களை மண்ணிலிருந்து வெளியேற்றிவிடும் என்று நியாயம் சொன்னோம். சொற்களல்ல செயல்களே தேவை எனக்கூறியபோது வீரத்துடன் விவேகமும் வேண்டுமெனச் சுட்டிக்காட்டினோம்.

பெண்கள் போராட்டத்தில் பார்வையாளர்களாகவே இருக்க முடியும் என்றபோது இல்லைப் பங்குதாரர்களாக முடியுமென்று நிலைநாட்டினோம். தலைமையின் நலன்களுக்காக சகோதரப் படுகொலைகள் நடத்தப்பட்ட போது மக்களின் நலன் காவு கொடுக்கப்படுகிறதே என்று கண்டனம் தெரிவித்தோம்.

பம்பரம் போலச் சுற்றித்திரிந்து இந்த வேலைகளை மேற்கொண்டதால் பல்கலைக்கழக வாசல்கூட மறந்து போயிற்று. நாட்கள் நகர்ந்த விதம் கூடத் தெரிந்திருக்கவில்லை. காலச்சக்கரத்தில் மூன்று ஆண்டுகள் கழிந்து போயிற்று. 1986ன் இறுதிப் பகுதி வந்து சேர்ந்தது. ஈ.பி.ஆர். எல். எவ் என்னும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி செயற்படுவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அதன் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் உடனடியான அண்மையிலுள்ள விடுதலைப்புலிகளின் அலுவலகங்களில் சரணடையவும்-இத்தகையவர்களை பாதுகாத்து வைத்திருப்பவர்களும் கூடத் தண்டனைக்கு இலக்காகலாம். என்ற அறிவிப்பை முழங்கியபடி ஒலிபெருக்கி கட்டிய வாகனங்கள் வீதி வீதியாகத் திரிந்தன. நாங்கள் தங்கியிருந்த வட்டுக்கோட்டைப் பகுதிக்கும் காற்றலைகள் இவ் அறிவிப்பைக் கொண்டு வந்தன.

என்ன செய்வது? ஏன் இந்த அறிவிப்பு? நாங்கள் செய்த தவறென்ன? என்ற கேள்விகள் மூளையைக் குடைந்தன. ஒபரோய் தேவன் முதல் சின்ன மெண்டிஸ் வரை சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவங்களை அறிந்திருந்த நெஞ்சம் பயத்தால் படபடத்தது.

அரசாங்கப் படைகளின் சித்திரவதைகள், கொடூரங்கள் பற்றியெல்லாம் கவலைப்படாமல் ஆதரவு காட்டிய மக்கள், விடுதலைப்புலிகளின் பலத்திற்கு ஈடுகொடுக்க முடியாத நிலையில் எம்மை மண்ணிலிருந்து வெளியேறுமாறு அறிவுறுத்தினர். ஆலோசனை கூறினர். சரணடைவது பாதுகாப்பிற்கு குந்தகமானது.

எனவே தப்பியோடுங்கள். அதுவரையில் முடிந்தளவு ஆதரவு காட்டுகின்றோம் என்பதுவே எம்மை அறிந்தவர்களின் ஏகோபித்த அபிப்பிராயமாக இருந்தது. தட்டிக்கழிக்க முடியாத இந்தக்கூற்றுக்களைச் செரித்துக் கொண்டு பூட்டிய அறைக்குள் முடங்கிப் போயிருந்தேன். ஜன்னல் கதவுகள் கூட இல்லாத அறையை பேப்பர் கொண்டு மூடி வைக்கும் அளவுக்கு புலனாய்வுப் புலிகள் பற்றிய அச்சம் நெஞ்சக்கூட்டுக்குள் பரந்திருந்தது.

அடைக்கலம் தந்த வீடுகளுக்கு சொந்தக்காரர்கள் தினசரி எடுத்து வரும் செய்திகள் கலக்கமடையச் செய்வதாகவே இருந்தது. ஸ்தாபனமாக-இயக்கமாக-பலருடன் கை கோர்த்து நின்ற நான் தனிமைப்பட்டவனானேன். தனியொரு மனிதனானேன். பரந்துபட்ட மானுட நேசமும், மக்கள் சக்தியின் மீது நம்பிக்கையும் இல்லாமல்-துப்பாக்கிகள் தரும் அதிகாரத்தால் அனைத்தையும் சாதிக்கலாமென கங்கணம் கட்டி நிற்கும் புலிகளின் முட்டாள்தனமான போக்கின் முன் மண்டியிடுவதை விடத்தப்பியோடுவதே சரி என முடிவெடுத்தேன்.

புலனாய்வுப் புலிகளின் கண்களில் மண்ணைத் தூவி-புலிகளது எடுபிடிகளாகத் திரிந்து ஒவ்வொருவர் பற்றியும் தகவல் சேகரித்து வழங்கிய கண்ணாடி என்று எங்களால் அழைக்கப்பட்ட இராசநாயகம் பரதனின் பார்வைக்குள் சிக்காமல் வவுனியாவை வந்தடைவதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது.

1987ன் ஆரம்பத்தில் கொழும்பை வந்தடைந்த போதும் சுயவாழ்வு சொந்த எதிர்காலம் பற்றிய சிந்தனைகளை விடவும் பொதுவாழ்வு-இனநலம் பற்றிய எண்ணங்களே மேலோங்கிக் கிடந்தது. இதனால் மனித உரிமை அமைப்புக்களின் தொடர்பும், சிறைகளில் வாடிய தமிழிளைஞர்களுக்காக செயற்படும் வாய்ப்பும் கிட்டியது.

சிறைச்சாலைகளுக்கு விஜயம் செய்வது, தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களை பார்ப்பது, அவர்களது வழக்குகளுக்கான சட்டத்தரணிகளை தொடர்புபடுத்துவது, தகவல் பரிமாற்றங்களைச் செய்வது, போன்ற சம்பளமில்லாத உத்தியோகம் வாய்த்தது. எனினும் மன உற்சாகத்துடன் அவற்றை மேற்கொண்டேன். இந்திய-இலங்கை ஒப்பந்தம் வந்து இந்தியப் படையினர் வந்த பின்னரும் கூட எனது பணிகள் தொடரப்படவேண்டியதாகவே இருந்தது.

இந்த நிலையில்தான் 1988ன் இறுதிப் பகுதியில் வடக்கு-கிழக்கு மாகாணசபை அமைக்கப்பட்டது. எமது தாயகப் பரப்பில் எம்மவருக்கு ஒரு ஆட்சி என உள்ளம் பூரித்தது. இந்த மாகாணசபையின் செயற்பாட்டுக்கு கொழும்பு அரசு போட்ட முட்டுக்கட்டைகள், இனத்தின் எதிர்கால நலன்கள் என்பதைப் புறக்கணித்து புலிகள் ஏற்படுத்திய குழப்பங்கள், உண்மைகளை உணராமல் உணர்ச்சிகளுக்குள் தள்ளப்பட்ட மக்களின் மயக்க நிலைமைகள் என்பவற்றிற்கு மத்தியில் வடகிழக்கு மாகாணசபையை மெல்ல அடி எடுத்து நடக்க வைக்க என்னாலியன்றதைச் செய்ய எண்ணினேன்.

இதற்காக கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணமானேன். சிவில் நிர்வாக சீர்குலைப்பு என்ற பெயரில் அரசாங்க உத்தியோகத்தர்களை பணிக்குச் செல்ல வேண்டாமெனப் புலிகள் பணித்தனர். வேலை செய்யாமல் இருந்தாலும் ஊதியத்தில் குறைவு இருக்காது என்று கொழும்பு உத்தரவாதம் செய்தது.

அரசாங்க உத்தியோகம் என்பது மக்களுக்கான சேவை என்பதை மறந்த-அல்லது மறுத்த எம்மவர்களும் கையெழுத்துப் போட்டுவிட்டால் காணும் என்ற மனோ நிலைமைக்கு உட்பட்டு நின்றனர். மாகாண அரசின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றவர்கள் என்ற வகையின் அரசாங்க உத்தியோகத்தர்களை வேலைகளை மேற்கொள்ளும்படி கட்டாயப்படுத்த வேண்டிய தாயிற்று.

இதில் ஓரளவுக்கு நிர்ப்பந்தம் மேற்கொள்ளவும் தேவை ஏற்பட்டுப் போயிற்று. இத்தகைய நிர்ப்பந்தங்களை பிரயோகித்தமையானது குறுகிய காலத்திற்கு வெற்றியை தந்திருந்த போதும் நீண்டகாலத் தோல்வியாகிவிட்டது என்பதை இப்போது உணர்கின்றேன்.

ஆனாலும் இந்தியப் படையின் துணையை அகற்றி, நட்புச் சக்திகளை பலவீனப்படுத்தி, களையெடுப்பு என்ற கண்மூடித்தனத்தால் மக்கள் மீதான சந்தேகக் கணைகளைப் பாய்ச்சி, எம்மைத் தவிர அனைவரும் துரோகிகள் எனக் கூறிவரும் புலிகள் தமது போரைத் தொடர்வதால் தமிழ் மக்களுக்கு அழிவும், வேதனைகளுமே, எஞ்சுகின்றது என்பதை உணரும் போது சங்கடம் தலைதூக்குகிறது.

இருட்டினில் வழிதேடும் குருடனைப் போல எத்தனை நாட்களுக்குத் தான் எமது மக்கள் சீவிக்க முடியும்? உண்மைகளை உண்மைகளாக ஏற்று உணர்ச்சி வசப்படாமல் நிதானமாக சிந்தித்து-எதிர்கால நலன்கள் குறித்த பொது விடயத்தில் பகிரங்கமாகப் பேச முன்வராதவரை எமது மக்களை எந்த வானத்து இரட்சகனும் வந்து இரட்சிக்க முடியாது என்றே எண்ணத் தோன்றுகிறது. ●




### நிதானமாக சிந்திப்பார்களா?

தமிழர் தாயகப் பகுதியில் சிங்களக் குடியேற்றம் நடக்கிறது. நடத்தத்திட்டமிடப்படுகிறது எண்டெல்லாம் கவலை. ஆனால் பாஸ்போர்ட்டுகளை கைகளில் ஏந்தியபடி எந்தப் பிளேனில் காலை வைச்சு எங்க போய் இறங்கலாம் என்ற சிந்தனையளோட நிண்டு கொண்டு வடக்கும்,கிழக்கும் தமிழர் தாயகம், பாரம்பரிய பூமி என்று உச்சரிக்கிறதால மட்டும் சிங்களக்குடியேற்றங்கள் நிக்காது கண்டியளோ? இந்த மண் எங்கட சொந்த மண்எண்டு சனம் விரும்பிக் குடியேறுற மாதிரி அலுவல்கள் நடக்கோணும் அதுக்கு துவக்குகளோட திரிஞ்சு வீரம் காட்டுறவை கொஞ்சமாவது நிதானமாய் சிந்திக்க வேணும். செய்வினமோ?

### கிழக்கின் கவலை

செம்மணிப் புதைகுழிகள் பற்றி யாழ்ப்பாணத்தில இருந்தும், கொழும்பில் இருந்தும் குரல் கொடுக்கின்ற கனவான்கள், 1990முதல் எழுவான் திசையில் நடந்து முடிந்து போன படுகொலைகள் பற்றிக் கவலைப்படாமல் இருக்கிறதால் அடுத்த திசையில பலமான முணுமுணுப்புகள். எங்கட ஊரில ஆக்களைச் சேர்த்துக் கொண்டு அங்கே போய் அடிபடுகினம். எங்கட ஊரில் நடக்கிறதுகளை கண்டு கொள்ளுகினம் இல்லையே. சனம் கவலையோட சொல்லுது. சம்பந்தப்பட்டவையளின் செவிகளில் விழுகுதோ, என்னவோ?

### பலமான சந்தேகம்

எதிர்ப்பு இல்லாமல் படையினர் முன்னேற்றம், நடப்பது குறித்துப் பலமான சந்தேகங்கள். அவையும், இவையும் பேசிப் பறைஞ்சுதான் சண்டையும் நடக்குதோ எண்டு. நானும் அடிக்கிற மாதிரி அடிக்கிறன். நீயும் அழுகுறமாதிரி அழ எண்டது போலவோ என்னவோ. புலி பதுங்கிறது பாயுறதுக்குத்தான் எண்டும் ஆக்கள் நினைக்காமலில்லை. ஆனால அவை நல்லாய் பலவீனமாய் போயிட்டினம் எண்ணுறார் அம்மான்.

### தமிழ் மக்களின் ஜனநாயகம்?

ஊரெல்லாம் தேர்தல் அமர்க்களம். அடுத்தடுத்துத் தேர்தல். பிரச்சாரம் தூள் பறக்குது. பழசுகளையே தூசு தட்டிக்கொண்டுவந்து நியாயம் கேட்கினம். கிழக்கு மற்றும் வவுனியா உள்ளூராட்சித்தேர்தல், வடகிழக்கு மாகாண சபைத் தேர்தல், பற்றிக் கேட்டால் சூழ்நிலை சரியில்லையாம். தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கு வழங்கப்படும் மரியாதை பற்றி ஜனநாயகப் பிரதிநிதிகள் கூடக் கவலைப்படேல்லை. பிறகு சனத்தைப் பற்றி ஏன் கேட்பான்?

### உரத்த முழக்கம்

1956ல் தனிச் சிங்களச் சட்டம், 1983ல் பிரிவினைத் தடைச்சட்டம், என்றெல்லாம் இன ஒடுக்குமுறைக்கான வித்துக்கள் ஊன்றப்பட்ட போது எதிர்த்து நிற்கத் திராணியற்றவர்களாக மண்டியிட்டவர்கள் இப்ப வீரம் பேசுறதைப் பற்றி என்ன நினைக்கிறியள்? அப்ப சிங்களம் படிச்சம், பிரிவினைத் தடைச்சட்டத்தின் கீழ் சத்தியப் பிரமாணம் செய்தம் அதெல்லாம் தொழிலுக்காக. ஆனாலும் வீரமுள்ள தமிழன் என்பதால் மானத்தை இழக்கத் தயாரில்லை. அதனால்தான் யாழ்ப்பாணத்தில் போய் வாழ எனக்கு விருப்பமில்லாவிட்டாலும் தமிழீழம் தான் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு எண்டு உரத்து முழங்குகிறேன். கொழும்பில் தமிழ்க் கனவான் ஒருவர் கூட்டத்தில் முழங்கினார். கூட்டத்திலிருந்த ஒருவர் எழுந்து வந்து தமிழீழம் பற்றி கதைக்கிறதை குறைச்சால் நல்லது எண்டு ஆலோசனை கூறிச் சென்றார்.

### கூட்டறிக்கைக்கு பதில்

சிங்களக் குடியேற்றத்தை நிறுத்து, வலி வடக்கில் தமிழ் மக்கள் குடியேற அனுமதி என்று ஐந்து கட்சிகளும் கூட்டாக வேண்டுகோள் விடுத்ததும், அடுத்த நாளே கட்சிகளின் அலுவலகங்கள் படையினரால் முற்றுகையிடப்பட்டுள்ளது. தமிழ்க்கட்சிகள் அரசின் முந்தானையில் பிடித்துக்கொண்ட தொங்குவதாக நையாண்டி பண்ணுபவர்களுக்குத்தான் கொண்டாட்டம்.

# நாட்டில் ஆதிக்க.........

5ம் பக்கம் தொடர்ச்சி

சகல அதிகாரமும் கொண்ட ஜனாதிபதி முறை கடந்த 20வருடங்களில் ஏற்படுத்திய அனர்த்தங்கள் நாம் அறியாததல்ல.

**எனவே ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் இணைந்து செயற்பட வேண்டும் என்ற கருத்தை முன்வைப்பவர்கள் தமது கருத்தை மீள்பரிசீலனை செய்யவேண்டும். ஜனநாயகத்தை விட இனங்களின், நாட்டின் ஒற்றுமை முக்கியமானது என இவர்கள் கூறுகிறார்கள். இனங்களின் ஐக்கியம் என்பது கூட ஜனநாயக அம்சத்தையும் உள்ளடக்கியதே. சமாதானம் கூட ஜனநாயகத்துடன் கூடியதாகவே அமைய முடியும்.**

அடுத்து பயங்கரவாத எதிர்ப்பு முன்னணி என்றபெயரில் பேரினவாத அமைப்புக்கள் எல்லாம் ஒன்றிணைந்து ஒரு அமைப்பைத் தோற்றுவித்துள்ளன. இவர்களின் நச்சுக் கருத்துக்களில் இரத்தம் தோய்ந்திருக்கிறது. பயங்கரவாத எதிர்ப்பென்ற முகமூடியைத் தரித்துக் கொண்டு இவர்கள் தமிழர் விரோதப் கருத்துக்களை முன்வைக்கிறார்கள்.

தமிழர்களுக்கு என்ன பிரச்சினை இருக்கிறதென்று இவர்கள் கேட்கிறார்கள். இனப்பிரச்சினை ஒன்றில்லை. பயங்கரவாதத்தை ஒழித்துவிட்டால் சரி. இதற்காக ஒவ்வொரு சிங்கள இளைஞரும் தொண்டராக இணைந்து கொள்ள வேண்டும் என்றும் இனவாத அறை கூவல் விடுக்கிறார்கள்.

பயங்கரவாத இயக்கத்தில் இணைந்தவர்களின் குடும்பங்களைத்தண்டிப்பது பயங்கரவாதத்தை ஒழிக்க ஒரு வழி என இவர்கள் கூறுகிறார்கள்.

இந்த விச ஜந்துக்கள் முளையிலேயே கிள்ளியெறியப்படவேண்டும். இவர்கள் செயற்படுவதற்கு இடமளிப்பவர்கள் பேரினவாதிகளாக இருக்க முடியுமே தவிர உண்மையான ஜனநாயக வாதிகளாக இனங்களின் சமத்துவத்தை வலியுறுத்துவர்களாக இருக்க முடியாது. எனவே இவர்களின் செயற்பாடுகளை கண்டுங்காணாமல் இருப்பது தீக் கோழி நிலைப்பாடாகும்.

பல்வேறு இனவாத, வன்முறை வாத கருத்துக்களின் ஆதிக்கம் இருக்கும் வரை இந்த நாட்டில் மனித உரிமைகளும், ஜனநாயகமும் இனங்களிடையேயான உறவுகளும் மேலும் சின்னாப்பின்னப்பட்டுச் சிதிலமாகிப் போகுமே தவிர உருப்பட வழியிருக்காது. எங்கும் இருள் சூழ்ந்துவிடும்.

**ஜனாநாயக உரிமைகளை, மனித விழுமியங்களைப் பாதுகாப்பதற்கும் தமிழ் மக்களுக்கும் நாட்டிற்கும் சிறந்த தலைமைத்துவத்தை உருவாக்குவதற்கும், மக்களின் விழிப்புணர்ச்சியையும், அரசியல் சமூக ஈடுபாட்டை அதிகரிக்கச் செய்வதற்கும் இவற்றில் அக்கறையுள்ள சத்திகள் செயற்பாட்டிற்கு வருவது அவசியமாகும்.**

# வன்னி மக்களு........

12ம் பக்கம் தொடர்ச்சி

வருகிறார்கள். மக்கள் விருப்பம் எது என்பதை யானை பார்த்த குருடர்கள் போல பலர் பலவிதமான வியாக்கியானங்களை அளிக்கிறார்கள். ஆனால் அவர்கள் நிம்மதியான வாழ்வை, சமாதானத்தை, கௌரவமான, சுயமரியாதையை உறுதி செய்யும் வாழ்வை விரும்புகிறார்கிறார்கள். தமது சொந்த இருப்பிடங்களில் மீள் குடியேறி வாழவிரும்புகிறார்கள்.

அவர்கள் இயக்கங்கள் வருவதை விரும்பவில்லை, கட்சிகள் வருவதை விரும்பவில்லை என்ற நிலைப்பாடு எடுப்பதற்கு ஒன்றும் முட்டாள்களல்ல. எந்தச் சமுதாயமும் தனக்கு அரசியல் தலைமைத்துவம் தேவையில்லையென்று கூறாது. புலிகளின் நிகழ்ச்சி நிரலிலிருந்து தமது பிரச்சாரங்களை மேற்கொள்ளும் ஊது குழல் பத்திரிகைக்காரர்கள் வேண்டுமானால் அவ்வாறு சொல்லலாம். மக்களின் முடிவுகள் தங்கள் பிழைப்புக்கு ஊறு விழைவிக்கும் என அவர்கள் எண்ணுகிறார்கள்.

**தற்போது தமிழ் மக்களுக்கு தலைமை ஏற்பவர்கள் எனச் சொல்பவர்கள் என்ன செய்யவேண்டும்? வடகிழக்கின் பல்வேறு பகுதிகளிலும் மக்கள் கதியற்று நிற்கிறார்கள். அவர்களின் உடனடித் தேவையென்ன? நீண்ட காலத்தேவையென்ன? என்பதை தெளிவாகச் சிந்தித்து செயற்படவேண்டும். உறுதியுடனும், விழிப்புடனும் செயற்பட வேண்டிய காலத்தில் தமிழ் மக்களுக்குத் தலைமை கொடுக்க வேண்டியவர்கள் தூங்கி வழியும் நிலையே காணப்படுகிறது.**

**ஆக்கபூர்வமான தீர்வொன்றைக் காண்பதில் சிங்கள, முஸ்லீம் மக்கள் மத்தியிலும் கணிசமான ஆதரவு உண்டு. தமிழ் மக்களின் இதுவரைகால இழப்பை ஈடு செய்யக்கூடிய தீர்வொன்றைக் காண்பதில் அனைத்து சக்திகளும் இணைந்து செயற்பட வேண்டும். இல்லாமல் இதே உக்கிரத்துடன் யுத்தம் தொடருமானால் மனிதர்கள், குடிமனைகள் காலி யாகிவிட்ட பாழ் நிலமொன்றே மிஞ்சும்.**

இந்தப் பாரதூரமான எதிர்கால நிலை யாராலும் உணரப்படவில்லை. "சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தை இரங்காரடி கிளியே" என்ற பாரதி பாடலுக்கு இசைவாகத்தான் நம்மவர்களின் செயற்பாடுகள் மந்த கதியில் இருக்கிறது.

புதிதாகக் கைப்பற்றப்பட்ட பகுதிகளுக்குள் மக்களுக்கு உதவுவது இராணுவத்தினதும் வவுனியா, மன்னார் அரச செயலகத்தினதும் வேலையென்றளவிலேயே தற்போதைய புரிதல் இருக்கிறது.


**இங்கு பிரச்சினைகளைப் புரிந்து கொள்வதிலும் குழப்பங்கள் இருக்கின்றன. இதில் நுண்உணர்வுகள் செயற்பட்டால்தான் ஏதாவது உருப்படியாகச் செய்ய முடியும். தமிழ்ச்சமுதாயம் மாத்திரமல்ல, தமிழ்த் தலைமைத்துவமும் கூட கணிசமான அளவில் அழிக் கப்பட்டுவிட்டது. நிறுவனங்களாகச் செயற்படக்கூடிய பல தலைவர்கள் அழிக்கப்பட்டுவிட்டார்கள். அதுவும் கூட இன்றைய சூழ்நிலைகளுக்குக்காரணம்.**

**எப்படியாயினும் இன்று தமிழ்ச் சமூகத்துக்கு உடனடி உதவிகளையும் நீண்ட கால தீர்வுகளையும் எட்டுவதற்கு உறுதியான தலைமைத்துவம் தேவை. அதனை நாம் கட்டியெழுப்பியாக வேண்டம். அது தன்நலமற்றதாகவும், அர்ப்பண உணர்வு கொண்டதாகவும், ஜனநாயகப் பண்பு கொண்டதாகவும், மனித உரிமைகளை மதிக்கக் கூடியதாகவும் இருக்கவேண்டும்.**

**மக்களே! உங்களைக் காட்சிப் பொருட்களாக்கி, உங்கள் துயரங்களுக்காக கழிவிரக்கப்பட்டு மாற்று எதனையும் கூறாமல் வீழ்ச்சி மனோபாவத்தை உருவாக்குபவர்களைப் புறத்தொதுக்குவோம். மக்களே! உங்களைக் காட்டித் தமது இராணுவ, பொருளாதார தேவைகளை பூர்த்தி செய்பவர்களைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள். அப்போதுதான் எமது சமுதாயத்தின் அழிவை கொஞ்சமேனும் தடுத்து நிறுத்த முடியும். மனிதனை மனிதன் நேசிக்கும் சமாதானபூர்வமான வழிகளில் பேச்சுவார்த்தை கலந்துரையாடல் மூலம் ஜனநாயக பூர்வமாக பிரச்சினை களைத் தீர்க்க முயற்சிப்போம். இங்கு உங்களது பங்களிப்பும், மதிநுட்பமும் தேவை.**

இந்தக் கால கட்டம் மிகவும் முக்கியமானது. வரலாற்று முட்டுச் சந்தில் நாம் நிறுத்தப்பட்டிருக்கிறோம். எனவே எமது ஒவ்வொரு அடிவைப்பும் எமதும், எமது எதிர்காலச் சந்ததியினதும் வாழ்வா? அழிவா? என்பதைத் தீர்மானிப்பதுமாகும். ●

# குறுக்கெழுத்துப் போட்டி–43



## இடமிருந்து வலம்

1. இந்த ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் நடைபெறப்போகும் இடம்.
4. இதற்குக் குறியீடு நாற்காலி.
7. கூரையேறிக் கோழி பிடிக்கத் தெரியாமல் வானமேறி இங்கே போவது எப்படி?
9. தென்மாகாணத்து ஊர்.
11. பொதுவாக இது வேலைத் தளம். நாடகப் பயிற்சி நடத்துவதற்கும் இதுதான் பெயர். (தலைகீழ்)
12. இளவரசர்.
14. மலர் கூம்பினால் மொட்டு; இது கூப்பினால் கும்பிடு.
15. கூசாமல் பொய் சொல்பவன்.
17. மாட்டின் கழிவு, பயிருக்கு உரம்.
18. இதன் பின்னால் 'பாளம்' சேர்ந்தால் தட்டு; 'பத்தியம்' சேர்ந்தால் குடும்ப வாழ்க்கை.
19. காணமல் போயிருக்கும் கடைசி எழுத்தையும் உத்தேசமாகக் கணித்துக் கொள்ளலாம். இது செய்யத் தெரிந்திருந்தால் போதும்.
20. தலைவனைப் பிரிந்த பெண் மேனியில் உண்டாவதாகப் பழைய இலக்கியங்கள் கூறும். (தலைகீழ்)
22. கெட்டியாகப் பிடித்துக்கொள்ள உதாரணம்.
24. கடைசி எழுத்தில்லை. இருந்தால் வெட்டலாம். (தலைகீழ்)
25. "தனித்திரு, விழித்திரு, ---" என்றார் வள்ளலார்.
27. வெளுத்ததெல்லாம் இதல்ல. (தலைகீழ்)
29. கடவுளுக்குச் சாத்திய பட்டுத்துணி. மரியாதைக் குரியோர் தலைக்கு வரும் கௌரவம்.
30. கோபம் வந்தால் விரல்களை மடக்கி ஓங்கி ஒன்று கொடுக்கலாம்.
31. காற்றுக்கு மேலெழும் மண் துகள்.

## மேலிருந்து கீழ்

1. செருக்கு.
2. புராணத்தின்படி நன்மைகள் நிறைந்த காலகட்டம். இடிபட்ட சுவர் போலக் கலி வீழ இது எழட்டும் என்கிறான் பாரதி.
3. துணிகளைத் தூய்மை செய்ய அடித்துத் --.
4. பொருள்கள் சேமித்து வைக்கும் இடம்.
5. வழக்கறிஞர். (குழம்பி)
6. ஒளியில் தெரியும் நிழலுருவம்.
8. சிலர் ஏதோ புதையல் கண்டுபிடிப்பது போல மற்றவர்களிடம் இது கண்டுபிடிப்பார்கள்.
10. எல்லாம் வல்ல இவனுக்கு இங்கே முதலெழுத்தில்லை.
13. கல்யாணத்திற்கு இதில் பொருத்தம் பார்ப்பது.
16. சினிமாவுக்குப் போன இவளை வைத்து ஜெயகாந்தன் ஒரு நாவல் எழுதியிருக்கிறார். (தலைகீழ்)
19. இன்னொரு நாட்டு எல்லைக்குள்ளோ அல்லது படைக்குள்ளோ இரகசியமாக நுழைதல்.
21. தாயக்கட்டையை உருட்டி விளையாடும் சூது.
22. இணையாமல் தனித்தனியாக இருப்பது.
23. சமையலுக்கு உதவும் ஒரு காய்க் கொடி. (குழம்பி)
25. இதில் ஆற்றைக் கடக்கலாம். துடுப்பு வேண்டுமே.
26. இராவணனுக்குத் தலைகள்.... (குழம்பி)
28. கால் இல்லாமலே வேகமாய் ஓடும். பயம் தரும்.

**விடைகளை மட்டும் தனியாக ஒரு தபாலட்டையில் எழுதி எதிர்வரும் 30ந் திகதிக்கு முன் அனுப்பி வையுங்கள்.**

**புதிய கண்ணோட்டம்**
**த.பெ.இல: 442**
**கொழும்பு**

## குறுக்கெழுத்துப் போட்டி–42 விடைகள்:

| இடமிருந்து வலம்: | | மேலிருந்து கீழ்: |
|---|---|---|
| 1. நாவின்ன | | 1. நாற்றங்கால் |
| 4. குடும்பம் | | 2. பீங்கான் |
| 8. கால்மாடு | | 3. பனங்கூடல் |
| 10. சந்து | | 4. கிடுகு |
| 11. பறங்கியர் | | 5. பிரகாசம் |
| 12. காது | 13. பீடம் | 6. பந்துவராளி |
| 14. அரவம் | | 7. தும் |
| 16. காசு | | 9. மாயம் |
| 18. தம்பிரான் | | 14. அம்பலம் |
| 19. கூந்தல் | | 15. சன்னம் |
| 20. பரி | 21. சளி | 17. சுதந்திரம் |
| 22. குசலம் | | 18. தரிசனம் |
| 23. பொதி | | 22. குயவன் |
| 24. நாயனம் | | 23. பொதிகை |
| 26. ரதி | 27. பாவம் | 24. நாபா |
| 28. குறளி | | 25. புறம் |
| 30. கைம்பெ(ண்) | | 28. குரு |
| 31. கரும்பு | | 29. புளி |

**சரியான விடை எழுதி ரூபா 100 பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:**

பூ. துவாரகன்
61, சிவன்கோயில் வீதி,
தோணிக்கல், வவுனியா.

**பாராட்டுப் பெறத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து பேர்கள் வருமாறு:**

1. திஸ்ஸடிலாந்தி
   கானடிலேன், களுவாஞ்சிகுடி.
2. பா. நிலக்ஷன்,
   100வீட்டு திட்டம்,எழுத்தூர்,மன்னார்.
3. சு. கேதீசன்
   26,ஜெயம் பாதை, வவுனியா.
4. ந. கந்தசாமி
   நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.
5. அ. யூடிற்றா லிசி
   கன்னியர்மட வீதி, மன்னார்.

# தமிழ்க்கட்சிகள் இணைந்து........

முதலாம் பக்கம் தொடர்ச்சி

**அரசாங்கம் அங்கு பல திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களைச் செய்து வருகின்றது. இப்படியான திட்ட மிட்ட குடியேற்றங்களை நாம் முழுமையாக எதிர்ப்பதுடன் லிங்கநகர் உட்பட சில இடங்களில் சமீபகாலமாக இடம் பெற்று வரும் சட்டவிரோத சிங்களக் குடியேற்றங்களைக் கலைத்துவிடுமாறு அரசாங்கத்தைக் கோருகின்றோம்.**

**3. செம்மணி விவகாரம் தொடர்பாக மிகவும் கால தாமதங்கள் மத்தியில் அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் அதனை மூடிமறைப்பதற்கான முயற்சிகளாகவே நாம் கருத வேண்டியுள்ளது. இவ்விவகாரத்தில் உண்மையைக் கண்டறிவதற்கு ஏதுவாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை இனியாவது அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் எனக் கோருவதுடன், தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சர்வதேச மன்னிபுச்சபை உட்பட இவ்விவகாரத்தில் அக்கறைகொண்டுள்ள சர்வதேச நிறுவனங்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் இப்புதை குழிகள் தோண்டப்பட வேண்டும் எனக்கோருவதுடன், இப்புதைகுழிகள் தொடர்பாக முதன் முதலாக தகவல் தெரிவித்த கோப்ரல் ராஜபக்சாவையும் இப்புதை குழிகளை அடையாளம் காட்ட அழைத்துச் செல்ல வேண்டும் எனவும் நாம் அரசைக் கோருகின்றோம்.**

**4. வன்னிப் பிரதேசத்தின் அரச கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கு உடனடியாக அத்தியாவசிய உணவுகளையும், மருந்து வகைகளையும் அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்குமாறும் கோருகின்றோம்.**

**இக்கோரிக்கைகள் தொடர்பாக அரசு என்ன நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்பதை ஆராய்வதற்காக மீண்டும் இரண்டு வாரத்துள் கூடி ஆராய்வதெனவும் முடிவு செய்யப்பட்டது.**

T.U.L.F., E.P.D.P., T.E.L.O., P.L.O.T., E.P.R.L.F

மா நகர
யாழ்ப்பாணம்



# வன்னி மக்களுக்கு ஓர் கடிதம்........

இந்த நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் மிக அதிக துன்பத்தில் உழல்பவர்கள் நீங்கள். ஈவிரக்கமற்ற யுத்தம், பொருளாதாரத் தடை, இடம்பெயர்வு, இவற்றால் ஏற்பட்ட பாரிய உயிரழிவு, குடிமனைகள், உடமைகள் நாசம், பெரும் சுகாதார சீர்கேடு, போசாக்கின்மை, தொழில் இன்மை, பட்டினி, மரணம் என்பன உங்கள் வாழ்வின் பிரிக்கமுடியாத அம்சங்களாகிவிட்டன.

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்தவர்கள், வன்னி இராணுவ நடவடிக்கைகளால் யாழ் நெடுஞ்சாலையில் இருந்தும், மன்னார் வவுனியா நெடுஞ்சாலையிலிருந்தும் வெளியேறியவர்கள் பீரங்கித்தாக்குதல்கள் நடக்காததூரம் என நம்பி வன்னியின் மூலை முடுக்குகளுக்கு இடம்பெயர்ந்தவர்கள் அரச கட்டுப்பாட்டில் உள்ள முகாம்களில் அடையுண்டு வருடக்கணக்கில் இருப்பவர்கள் என இங்கு உங்கள் வாழ்வு சிதறிக்கிடக்கிறது.

வன்னி வாழ் மாணவர்களின் அறிவுத்தாகத்தை பூர்த்தி செய்ய வேண்டிய கல்வி வறண்டு விட்டது. 30ஆயிரம் மாணவர்கள் கல்வி பெறும் உரிமையை இழந்து நிற்கிறார்கள். பிள்ளைகளின் கல்வி பாழாகிப் போன நிலையில், நல்ல உணவு கொடுக்க முடியாத நிலையில், போதிய வெளிச்சம் இல்லா இருட்டில் வாழ்வு ஓடிக்கொண்டிருக்கிறது. உங்கள் பிள்ளைகளின் ஒரு கணிசமான பகுதியினர் யுத்த யந்திரத்தின் பிரிக்க முடியாத பிரிவினராக மாற்றப்பட்டுள்ளனர். இந்த நரக வாழ்விலிருந்து விடிவே இல்லையா என நீங்கள் ஏங்குவது யாருக்குப் புரிகிறது.

தற்போது பெருந்திரளான மக்கள் வாழும் பகுதி களை இராணுவம் சுற்றிவளைக்கும் போது நீங்கள் அரச கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் வந்துவிடவேண்டும் என எண்ணுகிறீர்கள். நீங்கள் கடந்த பல வருடங்களாக அனுபவித்துவிட்ட துன்பம் உங்களை அவ்வாறு செய்யத்தூண்டுகிறது. எங்காவது நிம்மதியாக உட்கார முடியுமா என நீங்கள் அலைந்து கொண்டிருக்கிறீர்கள்.

சொந்தக்காலில் நின்ற நீங்கள் இன்று கையேந்தும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறீர்கள். ஆனால் உங்களது துயரமான நிலை கருத்திற்கெடுக்கப்படாமலே யுத்தம் தொடர்கிறது. யுத்த வாதிகளின் முன்னால் உங்கள் முகங்கள், எலும்பும் தசையும் இரத்தமும் உணர்வுமான உங்கள் வாழ்வு பொருளற்றுப் போய்விட்டது. தமிழ் மக்களின் அபிலாசைகளுக்காக மிகக்கூடுதலான விலையைச் செலுத்தியவர்கள் நீங்கள்.

உங்கள் துயரம் பலருக்கு வியாபாரப் பொருளாகிவிட்டது. கொள்ளைலாபம் ஈட்டுவோர், பொருட்களை கடத்துவோர், ஆட்களைக்கடத்துவோர், உங்களுக்குவரும் அத்தியாவசிய பொருட்களுக்கு வரிவிதிப்போர், செய்தி வியாபாரிகள், மேற்கத்திய நாடுகளில் தங்கள் இருப்பை உறுதிப்படுத்தும் தேவையுள்ளோர் எல்லாவற்றுக்கு மேலாக யுத்த யந்திரத்திற்கு, ஆள் திரட்டுவோர் எல்லோருமே உங்கள் வாழ்வை சுரண்டுகின்றார்கள். அதனால் உங்கள் வாழ்வு கந்தலாகிவிட்டிருக்கிறது.

**தற்போது அரசு கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் வருவதற்கு நீங்கள் எடுக்கும் பிரயத்தனம் ஒன்றும் தற்செயலானதல்ல. சகல நம்பிக்கைகளும் தவிடுபொடியாக்கப்பட்டு அர்த்தமற்ற யுத்தமும் சமுதாய அழிவும் தான் மிச்சமாக இருக்கும்போது உங்களுக்கு இதைத்தவிர வேறு வழிகிடையாது. உங்களுக்கு முடிவெடுப்பதற்கோ, கருத்துச் சொல்வதற்கோ, சரிபிழைகளைப்பற்றி உங்களுக்குள்ளே பேசுவதற்கு உரிமை கிடையாது இவற்றுக்காக ஆகக்குறைந்த பட்சம் சித்திரவதை அல்லது உயிரிழப்பு என்று இருக்கும் போது நீங்கள் எவ்வாறு வாய் திறப்பது?**

விடுதலைக்காகப் போராடப்புறப்பட்டவர்கள் இப்போதும் போரடிக்கொண்டிருப்பவர்கள் எனச் சொல்வோர் இன்று எதனை எமது சமூகத்திற்காகப் பெற்றுக்கொடுத்துள்ளார்கள். 20வருடங்களுக்கு முன்னர் இருந்த வாழ்வு பரவாயில்லை என்ற நிலைமையல்லவா தோன்றுவிக்கப்பட்டுள்ளது. முன்னர் இருந்த வாழ்வைவிட சுதந்திரமான ஒரு மேம்பட்ட வாழ்நிலையைக் கனவுகண்டே பல்லாயிரக் கணக்கான இளைஞர்களும், பெண்களும் தமது உயிரை மாய்த்தார்கள். கடைசியாக என்ன மிஞ்சியிருக்கிறது. வாழ்வதற்கான அடிப்படைகள் அனைத்துமே தகர்க்கப்பட்டுள்ளன.

உங்கள் வயல்கள், தோட்டங்கள், குடிமனைகள், கால்நடைகள் எல்லாமே பாழடிக்கப்பட்டு விட்டன. நீங்கள் இழந்த வாழ்வு மீள்கட்டி எழுப்பப்படு வதாக இருந்தால் கூட அதற்கு யுத்தம் நிற்க வேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு வேண்டும். சமாதானச் சூழல் உருவாகவேண்டும். அத்தகைய சூழலில் கூட உங்கள் வாழ்வை மறுநிர்மாணம் செய்வதற்கு மிக மிக அதிகமான பிரயாசை எடுக்க வேண்டும். உங்கள் விடுதலையின் பேரால் உங்கள் வாழ்வின் அடித்தளங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

தற்போது உங்களுடன் வாழ்ந்தவர்கள் உங்கள் பிரதேசங்களில் வாழ்ந்தவர்கள் பலர் வெளியேறிவிட்டார்கள். இன்னும் 5,10 வருடங்களுக்கு யுத்தம் நீடிக்குமானால் எத்தனை பேர் மிஞ்சுவார்கள். அப்போது எமது கோரிக்கைகளும் பல வீணடைந்துவிடும். மக்கள் பலவீனமாய் போகும்போது கோரிக்கைகள் பல வீணப்பட்டுப்போவது இயற்கையே.



**நீங்கள் இன்றைய சூழ்நிலையில் உங்களுக்கு என்ன தேவை என்பதனை தீர்மானிக்க வேண்டிய நிலையில் இருக்கிறீர்கள். மற்ற எல்லோருடைய கோரிக்கையையும் விட உங்களது கோரிக்கை வலுமிக்கது. உங்களைச் சொல்லியே இங்கு சிலர் தமது பிழைப்பை நடத்துகின்றார்கள். இப்போது நேரடியாகவே நீங்கள் அரங்கத்துக்கு வந்துள்ளீர்கள்.**

தற்போது இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட இரணை இலுப்பைக்குளம், பாலம்பிட்டி, மூன்று முறிப்பு, மடு ஆகிய பகுதிகளில் பெருமளவு மக்கள் புதிதாக அரசு கட்டுப்பாட்டில் உள்ள பகுதியினுள் வந்துள்ளார்கள். இப்படி அரச கட்டுப்பாட்டுப்பகுதியில் வாழவிரும்புவது ஒரு புதிய போக்காக இருக்கிறது.

1995ல் சூரிய கதிர் நடவடிக்கைகளின் போது வலிகாமத்தை விட்டு இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் வந்த பகுதிகளுக்குச் சென்றார்கள். அதேபோன்ற நிகழ்வுகளே தற்போது அதிகரித்து காணப்படுகின்றன.

புதிதாக கைப்பற்றப்பட்ட பகுதிகளுக்கு வரும் மக்கள் உணவுத்தேவை கருதியே வருகிறார்களென என மடுத்தேவலய குருவானவர் தேவசகாயம் அவர்கள் தெரிவிக்கின்றார். அதில் ஓரளவு உண்மை இருக்கிறது.

ஆனால் மக்கள் நம்பிக்கை கொள்வதற்கான நிலமைகள் எதுவுமே அற்றுப்போன நிலையில்தான் அவர்கள் சில முடிவுகளுக்கு

தொடர்ச்சி 11ம் பக்கம் ☞

## சிறுமி நிதர்சினியைப் படுகொலை செய்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும்



[illegible]றைக் கலாச்சாரம் இன்று உலகளாவியதாக [illegible]ள்ளதையே இச்சம்பவம் கோடிட்டுச் காட்டுகினறது. கீழ்த்தரமான நோக்கங்களுக்காக கொலை பாதகத்தில் ஈடுபடுவது எமது சமூகத்தில் சர்வசாதாரண விடயமாகிவிட்டது. இச்சம்பவம் புலம்பெயர்ந்து வாழும் தமிழர் சமூகத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளது. எமது சமூகம் நாகரீகமான பாரம்பரியங்களுக்கும் உயர்ந்த கலாச்சார விழுமியங்களுக்கும் உரித்துடையது.

போரும் புலம்பெயர்வும் சிலமனிதர்களை ஈவிரக்கமில்லாதவர்களாக மாற்றியுள்ளது. பெறுமதி வாய்ந்த மனித உயிர்கள் இவர்களுக்கு எந்தவிதமான பெறுமதியுமற்றது. அற்பமானது. இன்றைய உலகில் சிறுவர் துஸ்பிரயோகம், பெண்ணடிமைத்தனத்திற்கெதிரான கருத்துக்கள் பலம்பெற்று வருகையில் எமது சமூகத்தவர் மத்தியில் நிகழும் இத்தகைய சம்பவங்கள் நாம் எவ்வளவு பின்தங்கிய நிலையில் இருக்கிறோம், எத்தகைய கட்டுமிராண்டிக் குணாம்சம் எமது சமூகத்தில் ஆதிக்கம் வகிக்கிறது என்பதை எண்ணும் போது வேதனையும் சினமுமே எஞ்சுகிறது.

இந்த மாபாதகச் செயலைச் செய்த அயோக்கியர்களைக் கைது செய்வதிலும் சட்டத்தின் முன் நிறுத்துவதிலும் முழுத்தமிழ் சமூகமும் விழிப்புடன் செயற்பட வேண்டும்.

தாய்தந்தையர் வெளியே சென்றிருந்த சமயம் நிர்க்கதியாக நின்ற சிறுமியைக் பாலியல் பலாத்காரத்திற்குட்படுத்தி படுகொலை செய்து, கொள்ளையிட்டுச் சென்றவர்கள் இந்த உலகில் வாழ்வதற்கு எந்த அருகதையும் அற்றவர்கள். அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப் பட்டு உச்ச தண்டனைக்கு உள்ளாக்கப்பட வேண்டும்.

கிருஷாத்தி பாலியல் பலாத்காரப்படுகொலை உட்பட பல பாலியல் பலாத்காரப் படுகொலைகள் எமது மண்ணில் நடைபெற்றுள்ளன. இந்தப் பாதகச் செயல்களைச் செய்தவர்கள் சட்டத்தின் முன்னால் நிறுத்தப்பட்டு அதிகபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று எதிர்ப்பியங்கங்கள் நடத்தப்பட்டன.

அதேபோல் பாதாள உலகச் கோஷ்டியினரால் ரீட்டா யோன் என்ற மும்பாயைச் சேர்ந்த பெண்ணொருவர் பாலியல் பலாத்காரத்திகுட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட தற்கெதிராக மக்கள் வீதியில் இறங்கி ஆர்பாட்டம் செய்தார்கள். தற்பொழுது அவர்கள் கைது செய்யப்பட்டு விசாரணை நடைபெறுகிறது.

எனவே பிரான்சில் வாழும் நாம் குற்றவாளிகள் கைது செய்யப்படுவதற்கும் அவர்கள் கடுமையான தண்டணைக்குள்ளாக்கப்படுவதற்குமாக இயக்கங்களை நடாத்த வேண்டும்.

மேலும் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் தடுப்பதற்கான விழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும். இந்த மிலேச்சத்தனமான படுகொலையை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு சிறுமி நிதர்சினியின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
சர்வ தேசக் கிளை பிரான்ஸ்
**E.P.R.L.F**

## கண்ணீர் அஞ்சலி



**பேசாலையை பிறப்பிடமாகக் கொண்டவரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வளர்ச்சிக்காக கடந்த 15ஆண்டுகளுக்கு மேலாக உழைத்தவருமான தோழர். திமுத்தி பெனாண்டோ (உதயன்) அவர்களின் மறைவு எமக்கெல்லாம் பேரதிர்ச்சியை ஏற்படுத்துவதாக அமைந்துவிட்டது. குழந்தை உள்ளம் கொண்ட தோழர் உதயன் தோழர்களாலும், மக்களாலும் நேசிக்கப்பட்டவர். ஈழமக்கள் புரட்சிர விடுதலை முன்னணியின் இந்தியா பாசறைகளில் உருவாகிய தோழர் அவர். கட்சி பத்திரிகை விற்றல், பிரச்சாரம் மேற்கொள்ளல், மக்களின் அன்றாட பிரச்சினைகளில் உதவுதல் என பல்வேறு பணிகளில் ஈடுபட்டு வந்தவர். ஒரு முற்போக்கான கட்சியின் வளர்ச்சியே அவரது கனவாக இருந்தது. கட்சியின் வளர்ச்சிக்காக அவர் அயராது உழைத்து வந்த வேளையில் புற்று நோயினால் பீடிக்கப்பட்டு மரணமானார்.**

**தோழர் உதையனின் மறைவு எமது கட்சிக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். அன்னாரின் மறைவினால் துயருற்று இருக்கும் குடும்பத்தவர், உற்றார், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன் தோழர் உதயனின் மறைவிற்க்கு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது இதய அஞ்சலியை தெரிவித்துக் கொள்கிறது.**

# ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி EPRLF

22, வெளிவட்ட வீதி, வவுனியா சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களால் இரத்தனப்பிட்டிய CRC அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.